


# சிவதொண்டன்

மலர் - 64 இதழ் 9 - 10

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

விக்கிரம ஆவணி,
2000 ஒகஸ்ட் , செப்டம்பர்.

உ

திருச்சிற்றம்பலம்

**எங்கே யிருந்துன் அடியேன் உனை நினைந்தால்**
**அங்கே வந்தென்னொடும் உடனாகி நின்றருளி**
**இங்கே என்வினையை அறுத்திட்டு எனையாளுங்**
**கங்கா நாயகனே கழிப்பாலை மேயவனே .**

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருச்சிற்றம்பலம்

திருக்கழிப்பாலையில் எழுந்தருளியிருக்கும் பால் வண்ண நாத! படருஞ் சடைக்கங்கை வைத்த தலைவ! உனது ஆவணத்தடிமையாகிய மீளா அடியேன், இருவினையால் இடர்ப்பட்டு எவ்விடத்து நினைத்தாலும், அவ்விடத்து வந்து என்னோடும் கூடநின்று, என் இருவினையின் கட்டறுத்து, காத்தாள்கின்றனை. இத்தகைய நின் கருணைத்திறம் நினைந்து போற்றிப் பரவுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | இடம் |
|---|---|---|---|
| யாகம் | 03. 09. 2000<br>01. 10. 2000 | ஞாயிறு -<br>ஞாயிறு | சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம் |
| ஆச்சிரம வாழ்வு | 03. 09. 2000<br>17. 09. 2000<br>01. 10. 2000<br>15. 10. 2000<br>29. 10. 2000 | ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு<br>ஞாயிறு | சிவதொண்டன் நிலையம் செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம் செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம் செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம் செங்கலடி<br>சிவதொண்டன் நிலையம் செங்கலடி |
| ஆயிலியம் | 24. 09. 2000<br>21. 10. 2000 | ஞாயிறு<br>சனி | நன்பகல்: நல்லூர்த் தேரடி<br>மாலை: யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் நிலையங்கள் கொழும்புத்துறை ஆச்சிரமம். |

## பொருளடக்கம்


1. நல்லூரைக் கும்பிட்டு நீபாடு — 97
2. கண் கண்ட தெய்வம் - 1 — 98
3. தேர் வீழாத் தத்துவம் தேரீர் — 99
4. நல்லூர் வடிவேல் திருவடி — 101
5. நல்லூர்த் திருவிழா ஒரு திசைகாட்டி — 103
6. சிவயோகம் — 105
7. சிவசிந்தனை (நல்லூர்த் திருவிழா) — 107
8. திருப்பாசுரச் சிற்றுரை — 109
9. தசகாரியம் (தொடர்ச்சி) — 111
10. பிரமசூத்திரம் (தொடர்ச்சி) — 112
11. நல்லூர் முருகன் திருப்புகழ் — 114
12. நல்லைத் தேரடி ஞானசந்தானம் — 115
13. கந்தர் கலிவெண்பாச் சாரம் (ஆசிரியர்) — 11[illegible]
14. நற்சிந்தனை — 117
15. NATCHINTHANAI — 120
16. PRAYER WITHOUT EXPECTATION IS MEDITATION


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டன்

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்"

மலர் :- 64 | விக்கிரம ஸ்ரீ ஆவணி, 2000 ஓகஸ்ட் , செப்டம்பர். | இதழ் :- 9-10


## நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு

**பல்லவி**

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு - அதனால்
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.

**அநுபல்லவி**

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம் கொண்டு நீ செல்லு - நல்லூரை

**சரணங்கள்**

வாடியுன் மனம் ஓடினாலும் - வருத்தங்கள்
கோடி கோடியாய்க் கூடினாலும் குறைகள் வந்து
தேடியே யுன்னை மூடினாலும்
செல்லப்பன் பாதம் சிந்தித்தால்
ஓடி ஓடிப்போமே ... - நல்லூரை

பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டு நீ
கண்ட கண்ட இடம் கலங்கித் திரியாதே - நல்லூரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் கண்ட தெய்வம்

## 1. என்னிலும் என்னை நன்கு அறிந்த எங்கள் சுவாமி

**அகரமாம் எழுத்துப் போல**
**அனைத்திலும் கலந்து நின்றே**
**இகபரம் இரண்டு மீந்த எழிற்குரு**
**திருத்தாள் வாழ்க**

- நற்சிந்தனை

அன்னையாய் பெற்றெடுத்து, தந்தையாய் வளர்த்து, ஆசிரியனாய் கல்வி போதித்த எங்கள் தெய்வம் வாழ்க்கைக்கென்றோர் ஆசிரியத் தொழிலளித்து, கொழும்பில் பணி செய்ய விட்டது.

தொழிலைக் கவனமாகச் செய்து கொண்டு இயன்ற தொண்டுகளையும் புரிந்து திரிந்த அந்நாள்களிலே மகாத்மாகாந்தியின் இயக்கத்தில் மனம் ஈர்ப்புண்டது. மகாத்மா காந்தியின் சத்திய் சோதனையான வாழ்வும், அவர்தம் எளிமை, தியாகம், நேர்மை, வீரம் என்பனவும் முன்மாதிரியானவையாகப் பட்டன. எமது நண்பர் ஒருவர் காந்தியின் விடுதலைப் போராட்டம் குறித்து மிக்க உணர்ச்சிகரமாக உரையாடுவார். இத்தகைய ஈடுபாடு ஈற்றிலே பாரததேசம் சென்று சுதந்திரத்திற்காகப் போராடும் தொண்டர்களுடன் நாமும் சேர்ந்து போராடுவது என்ற தீர்மானமாகப் பரிணமித்தது. இதன் பொருட்டு உத்தியோகத்தைத் துறப்பதும் இலகுவான கருமமாகப்பட்டது.

இவ்வேளையில் ஒரு நாள் யோகசுவாமிகள் கொழும்பில் வந்து நிற்கிறார் எனக் கேள்விப்பட்டோம். கொழும்பிலே ஸ்கெல்டன் வீதி, **{Skeletan Road}** என்ற இடத்தில் அமரர் திரு. வாலுப்பிள்ளை அவர்களது இல்லத்தில் தங்கியிருக்கிறார் என்பதையும் விசாரித்து அறிந்து கொண்டோம். யோகசுவாமிகளிடம் சென்று எங்களது புனிதமான திட்டத்திற்கு ஆசீர்வாதம் பெறுவது எங்கள் எண்ணம். இவ்வெண்ணத்துடன் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றோம். சுவாமிகள் தங்கியிருந்த இல்லம் நீண்டு அடர்ந்து வளர்ந்த பெரிய மரங்களும் பூச்செடிகளும் நிறைந்து குளிர்ந்த சோலை சூழ்ந்ததாய் இருந்தது. சுவாமி, இல்லத்து முன் விறாந்தையில் நாற்காலியில் அமர்ந்திருந்தார். வெண்ணிற வேட்டி, மார்பிற் போட்ட சால்வை சங்கொத்த தலைமயிர், தாடி, சாந்தமான முகம் திருநீற்றுப்பொலிவு என்பவற்றோடு திகழ்ந்த சுவாமிகளைக் கண்ணுற்றதும் இன்னதென விவரிக்க முடியாததோர் இனிய உணர்வு அரும்பியது. இருவருமாகக் கும்பிட்டு நின்றோம். சுவாமி அமருமாறு கூறினார். அமர்ந்திருக்கும் பொழுது இராமகிருஷ்ணபரமஹம்சர் அடியார்களை எவ்வாறு கும்பிடவேண்டுமென்று கூறியிருக்கிறார். அவ்வாறே நீங்கள் கும்பிட்டீர்கள். நல்லது ; எனக் கூறி எங்களைப் பற்றி விசாரித்தார். நாங்கள் கூறியதைக் கேட்டு விட்டு "உத்தியோகத்தைமட்டும் விட்டு விடாதீர்கள்" எனக் கூறினார். எனது மனம் இவ்வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உடனே படிந்தது. நண்பருக்குச் சுதந்திரதாகம் தணியாததாக இருந்தது போலும். அவர் "வயிற்றை நிரப்புவதற்கான இந்த உத்தியோகம் எதற்கு?" இந்தியா சென்று மகாத்மாகாந்தியின் இயக்கத்தில் சேர்ந்து போராடுவதே முடிவு என்பதாகக் கதைத்தார். அவர் அவ்வார்த்தைகளை உள்ளத்தூய்மையுடனே கதைத்தார் என்பது உறுதி. ஆனால் அவர் தம் உள்ளப் பலவீனத்தை அறியார். அவரது கதையைக் கேட்டுவிட்டுச் சுவாமிகள் ஆங்கிலத்தில்

**" I know you man, better than you know you"**

(நீ உன்னை அறிந்திருப்பதையும் விட நான் உன்னை நன்கு அறிவேன்), எனக் கூறினார். இதன் பின் சுவாமிகளிடம் விடைபெற எழுந்தோம்.

நண்பர் ஓர் உணர்ச்சி வசப்பட்ட மனிதர். அவரது உள்ளத்துணர்ச்சி சுவாமிகளின் வாக்கைக் கொள்ள விடாது தள்ளிவிட்டது அவர் இந்தியா சென்றார். தலயாத்திரை செய்து மீண்டு, இல்வாழ்க்கையிலும் ஈடுபட்டு இன்பதுன்பங்களில் உழன்றார்.சுவாமி வாக்கு உண்ணின்று உதவியதால் அவர் உத்தியோகத்தை மட்டும் விடாதிருந்தார். அதனால் இன்னல்களுக்கு மத்தியிலும் அவரால் ஒருவாறு வாழ முடிந்தது.

எங்கள் சுவாமி நண்பருக்கு கண்டிப்பான குரலில் சொன்ன வாக்கு எமக்கோர் கனிவான அருள் மொழியாக அமைந்தது. அக்கனிவான மொழியாவது:

அன்ப, யான் உன்னை உன்னிலும் நன்கு அறிந்தவனாக உள்ளேனல்லவா. ஆதலால் உன்னை உனக்கு அறிவித்து உன்னை ஆளாக்குவேன்.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்விழாத் தத்துவம் தேரீ

**ஆழித் தேர் வித்தகனை**
**நான் கண்டது ஆரூரே**
*- அப்பர் சுவாமிகள்*

மக்கள் மாண்புற வேண்டிய இறை பக்தியை இன்று அருளும் சில தலங்களுள் யாழ்பாணத்திலுள்ள நல்லூர்த் தலமும் ஒன்றாகும். தேரடியில் சென்று தரிசித்தாற் போதும் என்னும் பழமொழியை யாவரும் அறிவர். இவ்வாண்டு நல்லூர்த் தேர்விழா 28-8-2000ம் திகதி திங்கட்கிழமை காலை 8.00மணிக்கு தொடங்கி நடைபெறும்.

ஒவ்வொரு திருக்கோயிலிலும் கொடியேறி நிகழும் திருவிழாவின் முடிவு நாள் தேர்விழாவாக அமையும். இவ்விழாவிலேயே எவ்வித ஏற்றத்தாழ்வும் இல்லாமல் யாவரும் ஒன்றுசேர்ந்து பெருமானைத் தேரிலேற்றி வீதிவலமாக இழுத்து வரும் பேறுளது. எனவே இவ்விழாவின் தத்துவத்தை ஈண்டு அறிவோமாக.

சிவாலயங்களில் நடைபெறும் தேர்விழா சிவபெருமான் திரிபுரதகனம் செய்தருளிய நிகழ்ச்சியைப் புலப்படுத்தும். ஒரு காலத்தில் தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்னும் மூன்று கொடிய அசுரர்கள் இருந்தனர். அவர்கள் இரும்பு, வெள்ளி, பொன் என்னும் உலோகங்களால். அமைத்துப் பறக்கும் தன்மை வாய்ந்த மூன்று கோட்டைகளை உடையவர்களாய் தேவர்க்கும் முனிவர்க்கும் பெருந்தீங்குகளைப் புரிந்தனர். ஆதலின் அவர்களை அழித்தருளப் பெருமான் திருவுளங்கொண்டனர். அதனால் பூமியே தேராகவும் சூரிய சந்திரர்கள் சக்கரங் களாகவும், விண்மீன்களை விதானமாகவும் மேரு மலையை வில்லாகவும், வாசுகியை நாணாகவும், நான்கு வேதங்களைக் குதிரைகளாகவும், பிரம தேவனைச் சாரதியாகவும் கொண்டு தேவர்பலரும் தேரின் உறுப்புகளாக அமைய, அதன் மீது ஏறிப் போருக்குப் புறப்பட்டார். இந்நிலையில் தேவர்கள் பலரும் தம்முடைய துணையினாலேயே சிவபிரான் அசுரர்களை வெற்றி கொள்ளப் போகிறார் என்றெண்ணிச் செருக்குற்றனர். அதனை அறிந்த பெருமான் அவர்களின் அறியாமையை நினைந்து தாம் புரிந்த புன்சிரிப்பினாலேயே திரிபுர அசுரரும். எரிந்து அழிந்தனர்.

**"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்**
**முப்புரஞ் செற்றனர் என்பர் மூடர்கள்**
**முப்புர மாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை ஆரறி வார்களே."**

எனத் திருமூலர், தாம் பாடிய திருமந்திர நூலில் திரிபுரதகனஞ் செய்த வரலாற்றின் தத்துவ நுட்பத்தை விளக்கியுள்ளார். ஆணவம் கன்மம் மாயை ஆகிய மும்மலங்களே முப்புரம் என்பர்.

இனி தேர்விழாத் தத்துவத்தை பெரியோர்கள் வேறு வகையாகவும் விளக்குவர்.

## உடலும் உறையும்

ஆன்மாக்களுக்குக் காரண சரீரம், கஞ்சுக சரீரம், குணசரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம் என ஐந்து சரீரங்கள் உண்டு. இவற்றை முறையே ஆநந்த மய கோசம், விஞ்ஞான மய கோசம், மனோமய கோசம், பிராண மய கோசம், அன்னமய கோசம் என்றும் கூறுவர். (கோசம் - உறை)

அசுத்த மாய தத்துவம் ஏனைத் தத்துவங்களுக்கும், சரீரங்களுக்கும், காரணமாக இருத்தலால், அதனால் உண்டாகிய சரீரம் காரண சரீரம் என்றும், அச்சரீரம் பெற்ற அளவில் கேவலத்தில் ஒன்றுமின்றி நின்ற ஆன்மாவுக்கு அறிவு, இச்சை, செயல்கள் பொது வகையில் விளக்கமுற அவ்வளவில் அம்மயக்க அறிவால் ஓர் ஆனந்த நிகழ்ச்சி நிகழ்தலின் அஃது ஆநந்தமய கோசம் என்றும் பெயர் பெறும்.

காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் 5 தத்துவங்களும் ஆன்மாவுக்கு 5 சட்டைகளைப் போன்றிருத்தலால், அவற்றால் உண்டாகிய சரீரம் கஞ்சுக சரீரம் என்றும் அச்சரீரத்தால் ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல்கள் சிறப்பு வகையால் விளக்கமுற்று விடய போகங்களை அறியும் அறிவும், இயல்பும், ஆற்றலும். பெறுமாதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விசேட அறிவை உண்டாக்கும் சரீரம் விஞ்ஞானமயகோசம் எனவும் பெயர்பெறும் சாத்துவீகம், இராசதம், தாமசம் என்னும் முக்குணங்களாகிய சரீரம் குண சரீரம் என்றும் அம்முக்குணங்கள் மனம் முதலிய அந்தக் காரணங்களைத் தம்முள் அடக்கி நிற்றலின் அது மனோமய கோசம் என்றம் வழங்கப்பெறும்

சூக்கும பூதங்களாகிய தன்மாத்திரைகளால் அமைந்த சரீரம் நுண்ணிய அணுவடிவினதாய் நிற்றலின் சூக்கும சரீரம் என்றும் அச்சூக்கும சரீரம் பிராணன் என்னும் வாயுவோடு நிற்றலாலும், தான் நீங்கும் காலத்தும் அப்பிராண வாயுவோடு கூடியே நீங்குதலாலும் பிராணமய கோசம் என்றும் சொல்லப்படும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் தூலபூதங்களால் உண்டாகிய சரீரம் தூல சரீரம் என்றும் அவை உணவால் வளர்க்கப்படுதலின் அன்னமய கோசம் என்றும் கூறப்படும் ஆன்மாவானது இந்த 5 கோசங்களின் வேறாயும், அவற்றோடு சேர்ந்து அது அதுவாகவும் நின்று அவற்றைச் செலுத்தும்.

இந்த 5 கோசங்களும் மாயையினின்று ஒன்றுக்கொன்று தூலமாய்த் தோன்றுவனவாகும் ஆனந்தமய விஞ்ஞானமய கோசங்கள் மிகவும் மென்மையானவையாதலின் அவைகள் தோற்பாவையைப் போலும், மனோமய, பிராணமய கோசங்கள் முன்னைய இரண்டிலும் சிறிது வன்மையுடையன. ஆதலின் அவைகள் மரப்பவையை ஒக்கும். அன்னமய கோசமாகிய தூலசரீரம் மிகவும் பருமை வடிவுடையதாதலின் ஏனைய நான்கிலும் பருமையும் வலிமையும் பெற்றிருக்கும் ஆதலின் அதற்குத் தேர் உவமையாகும். . .

மேற்கூறிய 5 கோசங்களையும் ஆன்மா ஒன்றாயும், வேறாயும், கலந்துநின்றும் இயக்குகின்றது. நடிகன் ஒருவன் பலவகைக் கோலங்களையும் வேடங்கொண்டு அவற்றின் வண்ண மாய் நின்று நடிக்கின்ற தன்மை போல ஆன்மாவும் இவ் வைந்து கோசங்களின் வயப்பட்டு நின்று இயங்கும். இத்தகையதொரு பெரும் தத்துவ நுட்பத் தையே திருக்கோயில்களில் நடைபெறும் தேர்த் திருவிழாக்கள் யாவர்க்கும் உருவக முறையில் காட்டா நிற்கும். எங்கள் சுவாமிகள் அடியவர் ஒருவ ருடைய தேகத்தைச் சுட்டிக்காட்டி "இது தான் தேர்" என்று கூறியதும் இதுபற்றிப்போலும்.

தேரினை மூலமூர்த்தி எழுந்தருளி யிருக்கும் கருவறைக்கு ஒப்பாகக் கூறுவதும் ஓர் உண்மையாகும். கருவறை உபபீடம் அதிட்டானம், பாதம், விமானம் என்னும் உறுப்புக்களைக் கொண்டிருப்பது போலவே தேரும் இந்நான்கு உறுப்புக்களையும் கொண்டிருக்கிறது. கருவறையில் இறைவன் எழுந்தருளியிருப்பது போலவே தேரிலும் இறைவன் வீற்றிருந்தருள்கிறார் என்பதே இதன் உட்பொருளாகும். தேரில் வீற்றிருப்பதன் ஓர் சிறப்பென்னவெனின் பெருமான் அடியவர் அனைவருக்கும் அருள்பாலிக்கும் கருணைப் பெருக்குடன் அடியவரை நெருங்கி வந்து திரையேதுமில்லாத வெளியில் வெளியனாயிருக்கின்றார் என்பதாகும். இந்த எளி வந்த கருணைப்பெருக்குப் பற்றியே செல்லப்ப தேசிகரும் தேர்முட்டிப்படியில் வீற்றிருந்தனர் போலும், ஆராலும் காண்டற்கரிய அண்டங்கடந்த பொருள் யாவர்க்கும் எளியராய், இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்தையும் ஏந்திக் கொண்டு, எதிர்ப்பட்டோர்க்கெல்லாம் இல்லையென்னாது கொடுப்பதற்காக கருணைப்பித்துடன் அமர்ந்திருக்கும் இடமே தேர் எனத் தோன்றுகின்றது. தேர் கருவறையை ஒத்திருப்பதாலும், மூலபண்டாரம் வழங்கச் சித்தம்வைத்திருத்தலாலும் தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதும் என்ற பாரறிந்த பழ மொழி நிலவுகிறது போலும். எங்கள் சுவாமிகளும் நல்லூர்ப் பெருமான் கோயிலைச் சுற்றிப் பிரதட்டிணம் பண்ண முடியாத முதியவரொருவரை நோக்கி "இயன்ற மட்டும் தேரடியில் இருந்து உருள்வா யாக" என்றதும் இக்கருத்து பற்றியேயாம்

**தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்**
**பாரறியச் சொன்ன பழங்கதையை - நீரறிய**
**மாட்டீரோ நின்று மனங் கசிந்து பாடீரோ**
**நாட்டீரே கேளீர் நலம்.**

நற்சிந்தனை

முருகா நீ வா

**முருகா நீவா – முத்திக்கும் பத்திக்கும் சித்திக்கும்**
**முழுவல்லவனே**

**உருகா மனமேன் தந்தாய் – திருமால்மருகா**
**உவந்துவந்து சிவந்ததாளினை**
**உச்சியில் வைச்சிடு மெச்சிய வீரனே (முருகா)**

**அறுமா முகனே யரனார் மகனே**
**குறுமாமுனிக்குப தேசஞ்சொன்ன**
**குருவே வருவாய் விரைவா யருள்வாய் (முருகா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் வடிவேல் திருவடி

ஆன்மா ஒருபோதும் கிளியே அழியாதது நாங்கள்
வீண்பாவம் விட்டிடெடி - கிளியே
விளங்கு *நல்லூர்* தெரியுதெடி

காண்பானும் காட்சியும் போய் கிளியே — கண்டபலபொருளும் விட்டு
மாண்பாகச் சிந்தையிலே — கிளியே
*வடிவேலைப்* போற்றிடெடி

ஊண் பொருளுமொழியுமெடி — கிளியே உலகமெல்லாம் அழியுமெடி
சேண் பொலியும் *திருவடியை* — கிளியே
சிந்தையிலே போற்றிடெடி

- *நற்சிந்தனை*

## நல்லூர்

நல்லூர் என்பது ஓர் இடப்பெயர். அது செம்மணிப் பகுதியிலே உள்ள குறித்த எல்லைகளுக்கு உட்பட்ட ஒரு குடியிருப் பென்பது பொதுவாகக் கொள்ளப்படும் பொருள் ஆயினும் யாழ்பாணத்தாரெல்லாருக்கும் குலதெய்வமாகிவிட்ட முருகப்பெருமான் எழுந்தருளியிருக்கும் அவ்வூர்க்கோயிலை அது சிறப்பாகக் குறிக்கிறது. நல்லூர் என்றால் புகழ் பெற்ற அக்கோயிலையே பொருள் கொள்கின்றோம். எங்கள் சுவாமிகள் நல்லூருக்குக் கொள்ளும் பொருள் இதனிலும் உயர்ந்தது. நல்ல என்னும் சொல்லுக்குரிய உயர்வுப்பொருளைக் கருத்துட்கொண்டதே சுவாமி கொள்ளும் பொருள். நல்ல எனும் சொல் நல்ல மண் என்பது முதல் நல்ல பெருமான் என்பது வரை செல்லும் அடி முதல் முடி வரையான பொருள்களுக் கெல்லாம் விசேடணமாயமைவது. எங்கள் சுவாமிகள் கொள்ளும் பொருள் உயர்வறவுயர்ந்த நலம் என்பதேயாம். இந்த நன்னலத்துக்குரிய இடமே நல்லூர் ஆகும். இவ்விடம் ஞானப்பெருவெளியே யன்றி வேறின்று. இந்த நல்லூர் செந்நெல்லும், கன்னலும் செறியும் நாமறிந்த நல்லூரினும் விழுமியது. தேகம் நாம் என்ற அறிவிலேயே செந்நெல் கன்னல் செண்பகமரம் எல்லாம் தோன்றுகின்றன. ஆன்மா நாமென்ற அறிவில் சீரகமுள்ள சீவான்மாவே பாரகமெங்கும் பரந்து தோன்றும். ஊன், உளம், நான், நீ, அவன், அவள், தீ, வான் என்பன எல்லாம் வீண்பாவனையாகக் கழிந்து விடும். இவ்வீண்பாவனையெல்லாம் விட்டு ஆன்மாவே நாம் என்ற அறிவில் நிற்கும் இடமே நல்லூர். இஃது வெய்யபுவிப்பார்வையே படாத வெறு வெளியேயாம். இத்தகைய ஞானப் பெருவெளியே நல்லூர். இதுவே அம்பரம் போல ஒளிரும், விளங்கும் நல்லூர்.

> ஆன்மா ஒரு போதும் அழியாதது நாங்கள்
> வீண்பாவம் விட்டிடடி — கிளியே
> விளங்கு நல்லூர் தெரியுதடி

என்ற கிளிக்கண்ணிப் பாடலின் நுட்பம் இதுவே (இவ்வண்ணம் பொருள் கொள்ளப்பெறும் இடமே சிதம்பரம் என்பதுமாகும். (சித் - ஞானம் அம்பரம் - பெருவெளி) செல்வச்சந்நிதி, சுன்னாகம் என்னும் சொற்களும் ஞானப்பொருள் குறிப்பனவே )

## வடிவேல்

நாம் பயப்பாட்டுடன் கும்பிட்டு நோக்கி நிற்கும் நல்லூர் கருவறையிலே வீற்றிருக்கின்ற சோதிப்பிரகாச வேலவரே வடிவேல் என்பதன் பொதுவான பொருளாகும். இவ் வடிவேற் பெருமானை நிரையாய் நின்று கும்பிடுவோருள் நினைப்பற நினைந்து நிலையோவியம் போலக் கும்பிடுவாரும் உண்டு. அழுது புலம்பி வாய்விட்ட ரற்றி வணங்குவாரும் உண்டு. பயப்பாடுடன் வீழ்ந்து கும்பிடுவோரும் உண்டு. பக்திக் களிப்பால் திளைத்துச் செம்மாப்படைவாரும் உண்டு. இவ்வாறு பலபல நிலைகளினின்றும் கும்பிடுவோர்க்கெல்லாம் வடிவேற்பெருமான் பல்வேறு நிலைகளில் தரிசனமளிப்பார். உடற்சுகம் வேண்டி நிற்பார்க்கு அவர் ஓர் வைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனாகத் தோன்றுவார். ஞானசுகம் வேண்டி நிற்பார்க்கு அவர் சுவாமிநாதனாகத் தோன்றுவார். திறவோர்க்கு ஆருயிர்தோறும் அதுவதுவாய் நிற்கும் பேருருவாகத் தோன்றுவார். எவ்வாறாயினும் இவ்வண்ணம் காண்பான் காட்சி காட்சிப் பொருளாகக் காணும் காண்பது முழுமையான மெய்ஞானக் காட்சியன்று. முழமையான காட்சி ஒன்றாகக் காணும் ஞானக் காட்சியேயாம். வடிவேற் பெருமான் பூரணமான ஞானத் திருவுரு. இந்த ஞானத் திருவுருவின் அடையாளமாகவே அவரது ஆழ்ந்த அடிப்பாகமும் அகன்ற நடுப்பாகமும் நுண்ணிய முடிப்பாகமும் ஆகவேல் உளது. எங்கள் சுவாமிகள் வடிவேற் பெருமானிடம் தரிசித்து நிற்பது இந்த ஆழ்ந்தகன்ற நுண்ணிய ஞான சொருபத்தை யேயாம். இஃது வேதங்களும் அறியொணாது ஐயா என்றரற்றிநிற்கும் வாலறிவேயாம்.

இனி, நல்லூர் என்பதற்கு நாதாந்தவெளி என்னும் ஞானப்பொருள் கண்டோமல்லவா? அந்த நாதாந்தவெளியே இதயவெளியுமாம். இந்த இதயவெளியில் காண்பான் காட்சி காட்சிப் பொருள் என்கின்ற பேதமில்லை. இம் மூன்றும் விட்டு ஒன்றாகி நிற்கும் இடமே இதயவெளி. இவ்விதய வெளியிலேயே பூரண ஞான சொருபமான வடிவேற்பெருமான் உறை கிறான். இதயவெளியிலே அறிவு சொருப மாயிருத்தலே மாண்புடைய வடிவேல் வழிபா டாகும்

**காண்பானும் காட்சியும் போய் – கிளியே**
**கண்ட புல பொருளும் விட்டு**
**மாண்பாகச் சிந்தையிலே – கிளியே**
**வடிவேலைப் போற்றிடடி**

## திருவடி

வீண்பாவனை எல்லாம் விட்ட இதயவெளி நல்லூர். இதற்கு வீண்பாவனைகளை விடுதல் என்ற சாதனை வேண்டி இருக்கிறது. இதயவெளியிலே காண்பான் காட்சி காட்சிப்பொருள் ஆகியவற்றை விட்டு நிற்பது வடிவேற்பெருமான் வழிபாடு. இதற்குக் காண்பான் ஆகியவற்றை விடுதல் எனும் சாதனை வேண்டியிருக்கிறது. இதயவெளியிலே அறிவு சொருபமாயிருக்குமிடத்துத் தரிசனமாவது திருவடி திருவருள் அது ஊண், பொருள், உலகம் யாவும் ஒழிந்தவிடத்து எஞ்சி நிற்கும் மூலப் முதற்பொருள். சோதிசொருபமாய் பொலிந்து தோன்றும் சுகப்பொருள். அச்சுகப்பொருளை நோக்குமிடத்து எதனையும் விடுதல் பற்றுதல் எனும் எண்ணங்கள் எழா. அதனை நோக்கிச் சும்மா இருத்தலே திருவடியைப் போற்றுதலாகும்.

**ஊண் பொருளும் ஒழியுமடி – கிளியே**
**உலக மெல்லாம் அழியுமடி**
**சேண் பொலியும் திருவடியைக்–கிளியே**
**சிந்தையிலே போற்றிடடி**

## முத்தனென வாழ முயல்

நேரிசை வெண்பா

**உருக்கு மொழியால் உளங்கொள்ளை கொண்டு**
**கருக்குழியிற் சேராமற் காத்தான் – திருக்குழாம்**
**காலையும் மாலையுங் கைதொழுது போற்றுநல்ல**
**வேலோன் பதியில் விரைந்து.**

**விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத்**
**தொண்டர்**
**நிரையாய் நினைப்பறவே நின்று – கரையில்லா**
**ஆனந்தங் கொண்டே அவனேநான் என்று நிதம்**
**ஞானத்தாற் சொன்னார் நயந்து.**

**நயப்பார் மிகவியப்பார் நாமறியோம் என்றே**
**பயப்பா டுடன்பாதம் வீழ்ந்து – சுயபுத்தி**
**அற்றவராய்ச் சோர்வுமிக அப்பனே யென்றழுவார்**
**மற்றொன் றறியார் மனத்து.**

**மனத்துயரம் மாற்ற மருந்துண்டோ விங்கு**
**முனைத்துவருஞ் சூரர் முடியத் – தனித்தவேல்**
**உண்டே துணையென் றோர்ந் தும்பர்சிறை மீட்டவனைக்**
**கண்டே களிக்கக் கருது.**

## ஈசனே நல்லூர் வாசனே

இராகம் காமஸ் தாளம் - ஆதி

பல்லவி

**ஈசனே நல்லூர் வாசனே**
**இனிய வேல்முருகா உனைநம்பினேன் வாவா.**
**பண்ணினேர் மொழியாள் பாலசுப்பிர மணியா**
**என்னும் எண்ணமெல்லாம் நண்ணும் வண்ணம்**
**வாவா (ஈசனே)**
**தாசனான யோகசுவாமி சாற்றும் படிவைக்**
**கேட்டுக்கி ருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா**
**(ஈசனே)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் திருவிழா ஒரு திசைகாட்டி

திருவேறிய தலம் திருத்தலம். ஒரு திருத்தலம் திருவேறப்பெறுதல் பலவழிகளால் அமைவது. அவையாவன.

1) இறைவன் அத்தலத்தை தான்வாழும் பழம்பதியாகக் கொள்ளல்
2) ஞானியர் உறைதல்
3) நல்லார்கள் குடிகளாக வாழ்தல்
4) வளஞ்சேர் பதியாயிருத்தல்
5) அநுபூதிச் செல்வர்களது மந்திரமாலைகளை யுடைத்தாயிருத்தல்

நல்லூர்த் திருத்தலம் இத்தனை சிறப்புக்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்றது. நல்லூர் தலத்திலே முருகப்பெருமான் "திடமாக உறைகின்றான்"

**"காலன் வலிதொலையக்**
**காலெடுத்தான் தந்தருளும்**
**பாலன் வாழ் நல்லைப் பழம்பதி"**

என்பது எங்கள் சுவாமிகளின் வாக்கு. நல்லைப்பதி செல்லப்பதேசிகர் உறைந்த பதியாகும். செல்லப்பதேசிகர் தினமும் தேர் முட்டிப்படியிலே இருந்தனர். அவர் அருந்தவம் செய்த இடம் அது.

***"அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்***
***அது வாதலாலே அதிசயம் மெத்த உண்டு"***

எனச் சுவாமி பாடுவார். அருந்தவம் செய்ததுடன் பூரணஞானியாய், மாறாத மௌனத் தியானத்தில் பூண்டு கிடந்த இடமும் அது. எந்த நேரமும் ஓமௌனச் சிந்தை செய்து கொண்டு வந்தபேருக்கு வாழ்வளித்த இடமும், அப்படியே உள்ளது எனும் ஞானமொழியை அந்தரங்கமாகச் செப்பிக்கொண்டிருந்த இடமும் அது. அவர்தம் நல்லெண்ணங்களினதும் நன்மொழிகளினதும் அழகிய ஆடலினதும் அருளலை என்றும் நல்லைப்பதியில் நின்று நிலவுவதாம். எங்கள் சுவாமிகள் செல்லப்ப தேசிகருடன் கூடி வாழ்ந்து ஞானவித்தை பயின்ற இடமும், சிவயோகத்திற் பொருந்திய இடமும் இதுவே. இவ்வாறு நாமறிந்த இரு ஞானியரின் திருப்பாதம் படிந்து திருவேறிய தலம் நல்லைத்தலம். நல்லைப்பழம்பதியில் நல்லார்கள் வாழ்வதும் சிறப்பே. அயலறியா அந்தணர்கள் வாழும் ஆன்ற நல்லைப்பதி என்பது நற்சிந்தனை. வடிவேற் பெருமானுக்கு அயலாக எதனையும் அறியாது , அப்பெருமானொருவனையே அறியும் செந்தண்மை பூண்ட செல்வர்கள் வாழும் செழும்பதி அது. செம்மணி பிரதேசத்தில் அமைந்துள்ள இத்திருத் தலம் நீர்வளம் நிலவளம் குறையா நல்லூர் ஆகும். செந்நெல்லும் கன்னலும் செறியும் நல்லூர். வாசமலர்ச் சோலைகளில் வண்டு பண்செய்வதும் காரார் குயில் பாடுவதுமான எழில் சேர் நல்லூர். இவ்வெழில் நலத்தாலே முழுதும் அழகிய முருகப்பெருமான் உகந்துறைதற்குரிய இடமாய் நல்லூர் ஆயிற்று. நல்லை பதிக்குப் பாமாலை சூட்டாத யாழ்ப்பாணத்துப் புலவர்கள் இல்லை என்றே கூறலாம். ஆயினும் அநுபூதிச் செல்வர்களது மந்திரமாலைகளையுடைத்தாயிருத்தலே அப்பதிக்குரிய திருவுடைமையாகின்றது. எங்கள் சுவாமிகள் அருளிச் செய்த பாமலர்கள் அத்தன்மையவாய் அமைந்திருக்கின்றன. இவ்வாற்றால் நல்லைப்பதி நலமெல்லாம் பொருந்திய நலம்சேர் நல்லூர் என்னும் சிறப்புக்கு உரியதாய்த் திகழ்கிறது.

நலம் சேர் நல்லூரின் திருவார்ந்த தன்மைக்கு இயைந்ததாக இத்திருத்தலத்து நடைமுறைகள் உள்ளன. இத்திருத்தலத்து நிருவாகம் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. அது திருவருளை முன்னிட்டு நிகழும் நிருவாகமாதலால் அருள் வழியிற் செல்வதாக உள்ளது. பரிபாலகராக எசமானருளரேனும் முதலாளித்தனம் ஏதும் பண்ணாதவரே அச்சிவதொண்டர் ஆவர். வழிபடுவோருக்குரிய வசதிகள் யாவும் அங்கு குறைவறப் பொருந்தியுள்ளன. தூய்மை, புனிதம், ஒழுங்கு, விழுப்பம் என்பன நிறைந்து தெய்வமணம் கமழும் பணிகளாலே இத்தலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாண்புடையதாகத் திகழ்கின்றது. நல்லைக் கந்தனை அபிடேக்கந்தன் என்றழைப்பர். சீமான் கோமான் என்றெல்லாம் நாம் போற்றும் கந்தக்கடவுளின் சீர்மைக்கேற்ற பொலிவுடன் அபிடேகக்கருமம் நிறைவாகச் செய்யப்படுகிறது. பூசனைப் பொருட்களைச் சேகரிப்பதிலும் சோடச உபசாரங்களைப் புரிவதிலும் செல்வச் சீர்மை பொலிந்திருக்கும். ஆயினும் வீணான இடம்பமான செலவுகள் களியாட்டங்கள் நிகழாமை நல்லூர்ப் பதிக்குரிய சிறப்பு ஆகும்.

திருவார்ந்த நல்லூர்ப்பதியிலே பதிபக் தியுடன் நிகழும் பூசை ஆதியன அமைவதால் இயல்பாகவே எல்லார் மனமும் ஈர்ப்புண்டு செல்கிறது. நல்லூர் திருவிழா காலத்திலே இது நன்கு தெரியும். நல்லூர் திருவிழா எனின் நாலூரும் விழிப்படைந்து விடும். இல்லங்களெல்லாம் தூய்மையதாய்த் தெய்வ மணம் கமழும். ஒரு போது உண்ணும் விரதியரும் சைவ உணவே உண்போருமாக ஒல்லும் வகையால் யாவரும் விரதம் காப்பர். யாழ்ப்பாணத் துக்கு வெளியே வேலை செய்வோர் திருவிழா காண்டற் பொருட்டு ஊர்வந்து சேர்வர். ஊர்சேர இயலாதவர்களும் வெளிநாடுகளில் வதிவோரும் திருவிழா நாட்களையும் வேளைகளையும் கணக்கிட்ட வராய் தாம் தாம் இருந்த இடங்களில் இருந்து கொண்டே மானசீகமாக நல்லைத் தரிசனம் செய்வர். தெளிந்த அறிவினிற் தரிசனம் செய்யலாமெனின் அது கண்களாற் காண்பதினும் நிறைவுடைய தல்லவா! நல்லைத் திருவிழாக் காணச் செல்வோர் ஆசாரத்துடன் செல்வதில் மிக்க அவதானமாக இருப்பர். ஆர்வத்தை உள்ளே வைத்திருத்தலில் அமையாத பக்தர் சிலர் பரவசத்தராய் மாறாட்டக்காரர் போல் வருவர். தேங்காய் இளநீர் தீங்கனி கொண்டு வரும் அடியார்களைப் பார்த்தால் ஐம்புலன் அடங்கி நிற்கத் தோன்றும்.வலம் வருவோரும் அயப்பாடுடன் நிலத்தில் வீழ்ந்து வணங்குவொரும் மெய் முழுதும் கம்பித்து அழுவாரும் மூலையிருந்து முருகா குமரா என முணுமுணுப்பாரும் சித்திரப்பாவை போன்று தியானிப்போருமாய் அடியார் தோன்றுவர். ஏககாலத்தில் கோயில் எங்கும் நிகழும் கற்பூர நீரஞ்சனத்தின் போது கண்கள் பனியரும்புதிரக் கண்டு நிற்கும் பக்தர்கள் நன்மோன நிறைவிற் பொருந்தியவர் முதல் வானெட்டக் கோஷிப்போரீறாய் பலபல தன்மையராய்த் திகழ்வர். பெருமான் வீதியுலாவரும்போது அடி அழிப்பதும் அங்கப்பிரதட்டிணம் செய்வதும் சைவத்திருமுறையுடன் முருகவேள் பன்னிரு திருமுறையும் நற்சிந்தனை வேதம் என்பன பாடுவதும் நல்லூர்ப் பதிக்குரிய சிறப்புக்களாம்.

நல்லூர்க்குரிய இந் நல்லியல்பு களேயன்றி அல்லாத இயல்புகள் நுழைய விடாமல் எச்சரிக்கையாயிருப்பதில் நல்லூர்த் தலம் முன்மாதிரியாகத் திகழ்கிறது. இதுவே இங்கு நாம் அழுத்திக் கூற விழையும் விடயமாகும். திருவிழாக்களின் போது உலகியலான கேளிக்கைகள் பல இடங்களில் இடம்பெறுவது வழக்கமாக இருந்து வருகிறது. மணியகாரர்களின் எடுப்பும், சின்னமேளச் சீரழிவும், வாணவேடிக் கைகளும் திருவிழாக் களின் சிறப்பையும் நோக்கையும் சிறுமைப் படுத்திய காலங்களும் இருந்தன. அக்காலங்களிலே பெரியார் பலர் தோன்றி அவ்வழுக்குகளை அகற்றப் பெரிதும் பாடுபட்டார்கள்.

இன்றும் நவீன பாணியிலான களியாட்ட அமிசங்கள் திருவிழாக்களின் போது நுழைகின்றன. உலக போகங்களிலே மோகமுறும் சமூகங்களில் இத்தகைய நுழைவுகள் இயல்பு போலும். வலிந்து கவரும் மாய வாழ்க்கையானது ஆன்மீக அலையெறியும் இடங்களிலும் தன் இரைச்சலைப் போட விழைகின்றது. இந்திரியப்ப றவைகளின் இரைச்சலுக்கு இடமாதலைக் கண்டு திருவிழாக்களில் அமைதியாக இருந்து தரிசனஞ் செய்ய முடியாதிருக்கின்றதே என ஆன்ம சாதகர் ஏங்குவார். எவ்வாறு தான் உலகியலான ஆரவாரங்கள் இரைச்சலிட்டாலும் ஆன்மீக மௌனத்தின் முன் அவை தலைகுனிய வேண்டியனவே. நல்லூர்த்திருத்தலத்திலே இத்தகைய ஆன்மீகத்தின் வெற்றி பற்றிய ஒரு பாரம்பரியம் உளது. தொடர்ந்தும் இப்பாரம் பரியத்தைப் பேணுவது நல்லார் கடனாகும். இவ்வாறு பேணப்படின் மற்றைய திருத்தலங்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கும் அது ஒரு நல்ல திசைகாட்டியாக அமையும்.

**ஓம் நம சிவாயவென**
**உருவேறவே செபிப்பார்**
**வீம்பிடம்பம் மேவுவரோ**
**மெய்ப்பொருள் கண்வளராய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவயோகத்தின் திருவுரு

யோக சுவாமி என்பதே எங்கள் சுவாமிகளது திருப்பெயர். எனினும் அன்பர் சிலர் சிவயோகசுவாமிகள் என ஆதரம் பெருக அழைப்பர். சுவாமிகளது சிவயோக சம்பந்தத்தை நினைவு கூருவதற்கு வாய்ப்பாக அவர்கள் அவ்வாறு அழைக்கின்றனர் போலும். சுவாமிகளது நற்சிந்தனைத் திருநூலிலே சிவயோகம் எனும் ஞானமொழி பலகாலும் பயின்று வருகின்றது. அவ்வாறு பயின்று வரும் இடங்களில் ஒன்று நல்லூரில் தேரடியில் நான் கண்ட சிவயோகம் என்பது. இதனாலே சுவாமிகள் நல்லூர்த் தேரடியில் சிவயோகத்திற் பொருந்தும் அநுபவத்தைப் பெற்றனர் என்பது தெளிவு. அன்று பொருந்திய சிவயோக அனுபவம் அவரை என்றும் பிரிந்ததில்லை. அவர் சந்ததம் சிவயோகஅநுபூதி தவறாதவராக இருந்தார். ஆதலால் சம்பந்தப் பெருமானை ஞானத்தின் திருவுரு என்பது போலச் சுவாமிகளை சிவயோகத்தின் திருவுரு எனல் சாலவும் நன்று.

## சிவயோக வரைவிலக்கணம்

எங்கள் குருபரன் சிவயோகத்தின் திருவுருவாகத் திகழ்ந்தனராதலால் எங்கள் குரபரனது நெறியிற் செல்லும் சிவதொண்டர்கள் சிவயோகம் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். சிவயோகம் என்பதன் வரைவிலக்கணம் என வருணிக்கத்தகுந்த ஒரு பகுதியமைந்த திருப்புகழ் ஒன்றைச் "சிவதொண்டன்" சென்ற இதழ் தன் முகப்பிலே பொறித்திருந்தது. அத்திருப்புகழ் எங்கள் குரநாதனுக்கு மிகப் பிடித்த திருப்புகழாகும். அதனை அவர் இனிமையாகப்பாடுவார். எங்களை அதனை மனனஞ் செய்யுமாறு பணித்தார். பணிப்பின்படியே அது எங்களுக்கு மனனமாயுள்ளது. அந்தத் திருப்புகழின் சிவயோக வரைவிலக்கணப்பகுதியை இங்கு எடுத்தாண்டு அதனடிப்படையிலே சிவயோகத்தை விளங்க முயலுவோம்.

**ஐந்து பூதமும் ஆறு சமயமும்**
**மந்த்ர வேதபு ராணகலைகளும்**
**ஐம்பத் தோர் வித மானலிபிகளும் ~ வெகுரூப**
**அண்ட ராதிச ராசரமு முயர்**
**புண்ட ரீகனு மேக நிறவனும்**
**அந்தி போலுரு வானு நிலவொடு ~ வெயில்**
**காலும்**

**சந்த்ர சூரியர் தாமு மசபையும்**
**விந்து நாதமு மேகவடிவம**
**தன் சொரூபம தாயுறைவது சிவயோகம்**

இவ்வுலகம் நிலம் முதலாய ஐம்பூதங்களாகப் பொலிந்து தோன்றுகிறது. இவ்வுலகிலே எண்ணிறந்த சமயங்களும், அச்சமயங்களுக்குரிய வேதசாத்திர நூல்களும், அந்நூல்கள் அமைந்த அக்கரங்களும் ( அட்சரம்- எழுத்து) உள்ளன. இவற்றைச் சொற்பிரபஞ்சம் எனலாம். பொருட்பிரபஞ்சமும் சொற்பிரபஞ்சமும் அமைந்த பிரபஞ்சத்திலே தேவர் முதல் புல் ஈறாய் இயங்குவனவும் நிற்பனவுமான உயிர்த்திரள் உளது. இவ்வுயிர்த்திரளைப் படைத்துக்காத்து ஒடுக்கும் பிரமா விஷ்ணு உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் உள்ளனர். இவற்றுக்கு மேல் விந்து தத்துவம் உள்ளது. இவையெல்லாவற்றுக்கும் அந்தமாக நாததத்துவம் உளது. இவ்வண்ணம் நிலம் முதல் நாதம் அந்தமாய் பலபல கோலங்களாகப் பொலிந்து தோன்றுவது உண்மையில் ஓர் உருவே. அதனைச் சிவரூபம் என்போம். பலபலவான கோலங்களெல்லாம் மாமாயையின் அலைப்பினால் தோன்றும் விகார உருவங்களே. இந்த விகார உருவங்கள் மருளைத் தந்து மயக்குகின்றன. மருளைத் தந்து மயக்கும் இப்பொருள்களை மாற்றி அருள்மயமாகக் கண்டால் எல்லாம் சிவ ரூபமே. எல்லாஞ் சிவ ரூபமாயிருக்கும் அருளொளிக்கும் அப்பால் செல்லின் உருவமெதுவுமற்ற அதன் சொரூப மொன்றே தோன்றும். அந்தச் சோதி சொரூபத்தில் ஒன்றும் அறியாமற் பூண்டு கிடப்பதே சிவயோகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாத சுவாமிகள் கூறும் இச்சிவயோக வரைவிலக்கணத்துடன் சிவயோகத்திற் பொருந்தும் நெறியையும் அறிவது நலமாகும். குருநெறியே சிவயோகம் உறும் நெறியாம். மலபரியாக முற்ற சத்திநிபாத உத்தமராய் குரு உபதேசம் பெற்று குருசம்பி ரதாயமாகப் பெறுவது சிவயோகம் என அவர் கூறுவது மேல் வருமாறு:-

**தங்கள் ஆணவ மாயை கன்மம**
**லங்கள் போய் உபதேச குருபர**
**சம்ப்ர தாயமோ டேய்ந்த நெறியது —**
**பெறுவேனோ**

குருநெறிச் சென்று சிவயோகம் உறுவது பற்றிய அருணகிரியாரது திருப்புகழ் மொழிகளில் சிவயோக சுவாமிகள் தமது சுவானுபவத்தின் சாயலைத் தெளிவாகக் கண்டனர் போலும். எங்கள் சுவாமிகள் குருநெறிச் சென்று சிவயோகத்திற் பொருந்திய சுவாநுபவத்தைக் கூறும் மொழிகள் அருணகிரியாரது இலக் கணத்துக்கேற்ற இலக்கியமாக உள்ளன.

சுவாமிகள் கூறும் சிவயோக அநுபவம் மேல்வருமாறு :-

**இருவரும் தேடிக்காணா இறைவன்**
**என்போல் உருத்தாங்கி**
**இணங்கி எவரும் வணங்கும் நல்லையில்**
**இன்னான் இவனென்ன**
**ஒருவருமறியா தோடியுலாவி உவகை பூத்த**
**முகத்தினராய்**
**ஒருநாள் என்றனை உற்றுநோக்கி**
**ஒரு பொல்லாப்புமில்லையென்று**
**அருவமும் காட்டி உருவமும் காட்டி**
**அப்பாற் கப்பாலாம்**
**அருள் நிலை காட்டிக் காட்டிக் காட்டி**
**அந்தமாதியில்லா**
**சொருபமும் காட்டிச் சும்மா இருக்கும்**
**சூட்சத்தில் மாட்டி விட்டான்**
**துன்பமிறந்தன இன்பமிறந்தன சோதி சோதி**
**சிவசோதி**

இப்பாடலின் முதற்பகுதயிலே சிவயோக சுவாமிகள் செல்லப்பதேசிகர் என்னும் சிவகுருவிடம் ஒரு பொல்லாப்புமில்லை என்னும் உபதேசமொழி பெற்றமையுள்ளது. பின் இரு அடிகளிலும் அவர் பொருந்திய சிவயோக அனுபவம் உளது. அருவமும் காட்டி உருவமும் காட்டி என்பதால் ஐந்து பூதம் முதல் நாததத்தவம் ஈறான தத்துவம் யாவும் சடமென்று காட்டிய குருவருள் உள்ளது. நிலம் முதல் நாதமீறான தத்துவரூபம் யாவும் ஏகவடிவமே என அருணகிரியார் கூறுவது அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி என்ற வார்த்தைகளில் வெளிப்படுகிறது. அப்பாற் கப்பாலாம் சொரூபமும் காட்டி என்பது அதன் "சொரூபமதாய்" என்ற திருப்புகழ் மொழியோடி யியைந்து செல்வது. உறைவது சிவயோகம் என்னும் திருப்புகழமுதம், "சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டான். துன்பமிறந்தன இன்பமிறந்தன சோதிசோதி சிவசோதி " என்னும் நற்சிந்தனை நல்லமுதமாக வெளிப்பட்டிருக்கிறது.

இந்தச் சிவயோக நிலை எல்லாரதும் சொந்த நிலையேயாம். மௌனநிலையில் நிற்கும் அனைவரும் இச்சிவயோக அனுபவத்திற் பொருந்தலாம். அவ்வாறு அனைவரும் பொருந்த வேண்டுமென்ற அருட்பெருக்காலே எங்கள் சுவாமிகள் அருணகிரியாது திருப்புகழ் அமிர்த்தத்தை பருகுமாறு அருளினார். தாமும் நற்சிந்தனை எனும் நல்லமுதம் ஈந்தார்.

**"இருந்தபடியே இருக்கும் பொருளை**
**அருந்தவர் கண்டு அர்ச்சித் தேத்தினர்**
**வருந்த வேண்டாம் மௌன நிலையில்**
**தருஞ் சிவயோகம் சச்சி தானந்தமே**
**ஓதுக அது நாம் ஓம் தத்சத் ஓம்"**

**செழுமலர்த் திருவடி**

இராகம் - காம்போதி தாளம் - ஆதி

பல்லவி

**செழுமலர்த் திருவடி தரிசிக்கலாம்**
**வாராய் தீய மனமே**

அநுபல்லவி

**தொழுமடியார் பழவினைகள் கழுவித்தள்ளி**
**துரியநிலை அருளவல்ல நல்லை நாதன்.**
**(செழுமலர்)**

சரணங்கள்

**முழுது முன்மையென முனிமுன் சொன்ன மொழி**
**மோகந் தீர்க்குமதை முற்றிலும் நம்பி**
**அடுத்து வந்தவெனை ஆதரித் தாண்டுகொள்**
**அம்புவி மீது நம்பினேனே. (செழுமலர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்த் திருவிழா

1. நல்லூர்க்கொடி யேற்ற மென்றால்
நாலூரும் விழிப்படைந்து
சொல்லாலும் செயலாலும் - கிளியே
தூய்மையாய் வாழ்ந்திடுமே

2. ஒருபோது உணவருந்தி
ஒழுங்காகக் கோயில் சென்று
தருமங்கள் செய்திடுவார் - கிளியே
சைவமாய் வாழ்ந்திடுவார்

3. கந்தனைக் கண்டிடலாம்
களிகொண்டு நின்றிடலாம்
வந்தனை செய்திடலாம் - கிளியே
வாராயோ நல்லூர்க்கு

4. காதலிற் சிறந்திடலாம்
கைப்பிடித்து வாழ்ந்திடலாம்
சாதலிற் தவிர்ந்திடலாம் - கிளியே
தயங்காம லோடிவாடி

5. பேரினைக் கேட்டிடலாம்
பித்தேற்றிக் கொண்டிடலாம்
வேரிக் கடம்பனடி - கிளியே
வேட்கையும் தணிந்திடலாம்

6. சிந்தனை செய்திடலாம்
சிவசிவ என்றிடலாம்
பந்தனை யகற்றிடலாம் - கிளியே
பாங்காக வருவாயோடி

7. ஆராரி ருந்தென்ன
ஆறுமுகன் தஞ்சமன்றி
வேறார்தான் துணையாவார் - கிளியே
விண்ணாணம் பேசாதேடி

8. பார்த்தாலே பசிதீரும்
பாலசண் முகன்வடிவை
வேர்த்தாவி மயங்குமுன்னர் - கிளியே
விரைந்துநீ நடந்துவாடி

9. நீராடி நீறணிந்து
நெற்றியிலே பொட்டுமிட்டு
மாறாட்டக் காரரைப்போல் - கிளியே
மனிதரெல்லாம் போறாரெடி

10. ஆறுமுக சுவாமிவாசல்
ஆறுதல் அளிக்கும் வாசல்
கூறுமடி யார்களெல்லாம் - கிளியே
கூட்டமாய்க் கூடுகிறார்

11. மணியோசை கேட்டவுடன்
மனத்தினை ஒடுக்கிக்கொண்டு
அணியணி யாகநின்று - கிளியே
ஆரத்தி பார்த்திடுவர்

12. வீதிவலம் வந்திடுவார்
வேலனைக்கொண் டாடிடுவார்
சோதிமய மாக்கிடுவார் - கிளியே
சுற்றுப்பு றங்களெல்லாம்

13. வலமாக வந்திடுவார்
வாயார வாழ்த்திடுவார்
இலமென்று இரந்திடுவார் - கிளியே
எங்கெங்கும் கூட்டமடி

14. அப்பனே முருகாவென்பார்
அழுது தொழுது நிற்பார்
செப்பித் திரிந்திடுவார் - கிளியே
செவ்வேளின் நாமமெல்லாம்

15. காணிக்கை போட்டிடுவார்
கற்பூரம் எரித்திடுவார்
கோணிய பிறைமுடியான் - கிளியே
குமரனைக் கும்பிடுவார்

16. காவடி எடுப்பவரும்
காலடி அழிப்பவரும்
சேவடி துதிப்பவரும் - கிளியே
சேர்ந்தொன்றாய்ச் செல்வரடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பண்டிதரும் பாமரரும்
பத்தியுடன் பாடியாடி
அண்டர்தொழும் நாயகனை – கிளியே
ஆர்வமுடன் ஏத்துகின்றார்

18. காவடி ஆடுவாரும்
களிகொண்டு பாடுவாரும்
சேவடி ஏத்துவாரும் – கிளியே
தெய்வங்கள் போன்றிடுவார்

19. பால்பழத் துடனேவந்து
பணிந்து அர்ச்சனைகள் செய்து
நால்வகைப் பேறுகளில் – கிளியே
நயந்தவற்றைப் பெறுகிறாரே

20. தாய் தந்தை மக்கடம்மை
தஞ்சமென் றொப்படைத்து
சேயோன்றன் திருவடியைக் – கிளியே
சேவித்து நிற்பாரடி

21. ஈராறு கையோனை
எழிலாரும் சேயோனை
ஆராத காதலுடன் – கிளியே
அடியார்கள் அழைத்திடுவார்

22. காலையிலும் மாலையிலும்
கைகூப்பி வணக்கஞ்செய்து
மூலைக்கு மூலைநின்று – கிளியே
முருகனருள் வேண்டிடுவர்

23. எல்லோரும் சேர்ந்தொன்றாய்
எழுப்புகின்ற ஏத்தொலிபோய்
எல்லூரும் வானத்திலே – கிளியே
எழுகடல்போல் இசைத்திடுமே

24. அரோகரா வென்றடியார்
அழைக்கின்ற ஓசைசென்று
பராபரன் செவிகளிலே – கிளியே
பணிவாகக் கேட்டிடுமே

25. நல்லைநகர் வாசஞ் செய்வோன்
நற்றவத்தோர் தங்கள் நேசன்
தொல்லையெல்லாம் போக்கிடுவான் கிளியே
தூய்மையுடன் தொழுதிடுவாய்

26. எல்லையில்லா அருளுடையான்
எல்லார்க்கு மெளியானவன்
வல்லசுரர் வலியை யெல்லாம் – கிளியே
வாட்டியருள் செய்திடுவான்

27. விரதங்கள் பிடிப்பவரும்
வேதங்கள் படிப்பவரும்
சிரவணஞ் செய்பவரும் – கிளியே
திரண்டொன்றாய்க் கூடிடுவார்

28. பாரெல்லாம் கூடி நின்று
பத்தியுடன் பரவிடுவார்
தேர்விழா கண்டிடுவார் – கிளியே
திருவருளும் பெற்றிடுவார்

29. நல்லூரிற் றேரிலன்று
நானில மக்களெல்லாம்
நல்லாக நோற்றிருந்து – கிளியே
நல்வரம் பெற்றிடுவார்

30. ஆராலும் அளந்தறியா
ஆறுமுகன் அருளையெல்லாம்
சீராகச் செப்பவென்றால் – கிளியே
சிறியேற்கு மாகுமோடி

31. ஒளிவீசும் வேலதனை
ஒண்டொடியே உள்ளே கண்டால்
வெளியிலுள்ள வினைரெல்லாம் – கிளியே
விட்டோடி மறைந்திடுவார்

32. ஈழநாடு வாழவந்த
எங்கள் குருநாதன்
நீளநினைக்க வைத்தான் – கிளியே
நிகரில்லா நல்லூரானை.

- சிவசிந்தனை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாசுரச் சிற்றுரை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## ஆதியின் அருள் வண்ணமும் அருளுறு நெறியும்

(ஆதிஞானம் எழுதத் திருவுளம் பற்றிய ஆளுடைய பிள்ளையார் அதன் துவக்கமாக வாழ்க அந்தணர் எனத் தொடங்கும் மங்கல வாழ்த்துப் பாசுரம் பாடினார். அடுத்து ஆதிஞானத்தின் முதலங்கமாக ஆதிமாண்பினை இரு பாசுரங்களிற் பாடினார். அதன் இரண்டாம் அங்கமான அருள்வண்ணமும் அருளுறுநெறியும் என்னும் பகுதியை மூன்று பாசுரங்களிற் பாடினார்.)

**ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்**
**கேட்பான் புகில் அள வில்லை கிழக்க வேண்டாம்**
**கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை**
**தாட்பால் வணங்கித் தலை நின்றிவை கேட்கதக்கார்.**

**ஏதுக்க ளானும் எடுத்தமொழி யானும்மிக்குச்**
**சோதிக்க வேண்டா சுடர் விட்டுளன் எங்கள் சோதி**
**மாதுக்க நீங்கலுறு வீர்மனம் பற்றி வாழ்வின்**
**சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே**

**ஆடுமெனவும் அருங் கூற்ற முதைத்து வேதம்**
**பாடுமெனவும் புகழல்லது பாவம் நீங்கக்**
**கேடும் பிறப்பும் அறுக்குமெனக் கேட்டிராகில்**
**நாடும் திறத்தார்க்கு அருள் அல்லது நாட்டலாமே**

இம்மூன்று பாசுரங்களிலுமுள்ள அருள் வண்ணத்தை மேல்வருமாறு வகுத்துரைக்கலாம்.

### அருள் வண்ணம்

1.1) அருள் அளவிலது
1.2) அருட்சோதி
1.3) அருளாடல்

### 1.1 அருள் அளவிலது

**ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும்**
**கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா**

ஆதி அளவிலா மாண்பினது. அது அரியது, எளியது, பெரியது, அந்தமுமாயது என்று ஒருவாறு கூறலாவதன்றி முற்றும் அறியொனாப் பெற்றியது. ஆதிபோலவே ஆதியிற் பின்னமில்லாத அருளும் அளவிலா மாண்பினையுடையது. அனைத்துமான ஆதிபோல அருளும் அனைத்துமானது. இடர் களை கணபதி வர அருளியது முதல் வெந்த சாம்பல் விரை எனப் பூசியது வரை அனைத்தும் அருளே. அனைத்தும் அருள்வெளிக்குள்ளேயே உள்ளன. ஆதலால் அருள் வெள்ளிடை மலை. வெள்ளிடை மலையான அதன் அளவிலா வண்ணத்தைச் சொல்லவும் வேண்டுமோ? சொல்லாமலே அமையும் என்ற பயிலும் தமிழ், அருள் வண்ணத்துக்கே முற்றும் பொருந்துவதாம்.

### 1.2 அருட் சோதி

**ஏதுக்க ளானும் எடுத்த மொழியாலும்**
**மிக்குச் சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன்.**
**எங்கள் சோதி**

சுடர் விட்டுளன் என்பதால் சோதி ஆதியையே குறிப்பதெனினும் சொரூபமான ஆதி தீன் அளவில் பேரருளால் முதலிற் கொண்ட வடிவம் சோதி வடிவமே யாதலால் சோதி அருளுக்கே உபசாரமாம். உபசாரமாகவே சோதி அருளையே குறித்து நின்றது. ஆதலால் சோதி சுடர் விட்டுளன். என்பது அருளையே குறிப்பதாம். அருட்சோதி சுடர்விட்டுள்ளமையால் அது தன்னைத்தானே விளக்கமுறுத்தி நிற்கின்றது. அதனை விளக்குதற்கு சுருதி யுக்தி ஆகிய அளவைகளால் சோதிக்க வேண்டிய அவசியமில்லை.

### 1:3 அருளாடல்

**ஆடு மெனவும் அருங் கூற்ற முதைத்து வேதம்**
**பாடு மெனவும் புகழல்லது பாவம் நீங்கக்**
**கேடும் பிறப்பும் அறுக்குமெனக் கேட்டிராகில்**
**நாடும் திறத்தார்க் கருள் அல்லது நாட்டலாமே**

அருளின் அளவிலா வண்ணம் சொல்லாமலே அமையுமெனினும், அருட்சோதி சோதித்தறிய வேண்டிய அவசியமில்லாது பட்டப்பகல் போல் ஒளிர்வதெனினும், ஒளியும் மிக இருளெனக் கொண்டுறங்கும் ஆத்து மாக்களுக்கிரங்கி, அருளுண்மையை நிலைநாட்ட ஆளுடையபிள்ளையார் திருவுளம்பற்றினார் போலும். இத்திருவுளத்தாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தொழிற் கூத்து அருங்கூற்றம் உதைத்தது. வேதம் பாடியது எனும் மூன்று அருளாடல்களைக் கூறி அருட்பிரகாசத்தை நிலை நாட்டுகின்றனர்.

**ஆடும்**

இறைவன் ஐந்தொழில் நிகழ்த்தும் காரியமாகக் கூத்தியற்றுகிறார். ஐந்தொழிலில் ஒன்றாக அருளல் உளதெனினும் உற்று நோக்கின் ஐந்தொழிலும் அருளல் எனும் ஒரு தொழிலில் அடங்குவதே. ஆதலில் நடராசவள்ளலது ஆடல் அருளாடலேயாம்.

**அருங் கூற்றம் உதைத்தல்**

பெருமான் நன்மனத்தாலே தன்னை வழிபட்ட மார்க்கண்டேயர்க்காக அவர்மேல் பாய்ந்து வந்த காலனைக் காலால் உதைத்தனர். மார்க்கண்டேயர் பதினாறு வயதினராதலால் கூற்றம் குதித்தது விதியே யெனினும் விதியினையும் விஞ்சி நிற்கும் அருள் வண்ணமே அருங் கூற்றம் உதைத்த அருளாடலால் நிறுவப் பெறுவதாம்.

**வேதம் பாடுதல்**

இருண் மலத்துள் அலமரும் ஆன்மாக்களுக்கு இரங்கியே இறைவன் வேதமோதினார். அதனால் ஒளிநெறி காட்டினார். ஆதலால் அவர் வேதம் பாடியது அறிவித்தாலன்றியறியாத சிற்றுயிர்களுக்கிரங்கி யேயாகும்.

1:3:4: **புழுலல்லாது பாவம் நீங்கக்**
**கேடும் பிறப்பும் அறுக்கு மெனக் கேட்டீராகில்**
**நாடும் திறத்தார்க் கருள் அல்லது நாட்டாலாமே**

அருளாளனான ஆதி ஐந்தொழிற் கூத்தியற்றல் ஆதிய அருட் செயல்கள் புரிதல் ஆன்மாக்கள் தன்னைப் போற்றிப் புகழ்தற்பொருட்டோ? தேவையேதுமில்லாத ஆதி புகழ்ச்சி விருப்பனோ? உயிர்களின் மலவிருள் போக்கி பிறப்பிறப்பு அறுத்தற் பொருட்டன்றோ இவற்றைப் புரிகின்றான். ஆதலால் இவையெல்லாம் இறைவனின் அருள் வண்ணத்தை நிலைநாட்டுவனவேயாம்.

## 2. அருள் உறு முறை

அருள் வண்ணம் கூறும் ஆளுடைய பிள்ளை அருளுறு நெறியையும் அதனுடன் இணைத்துக் கூறினர்.

**2:1 தக்கார் கோட்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை தாட்பால் வணங்கி தலை நின்று இவை கேட்க**

யாவரும் அருளொளிக்குள்ளே உள்ளனரெனினும் பகலொளியிற் கண்காணா ஆந்தையைப் போன்று மல இருளில் மருண்டோர் அருளொளியை அறியார். சத்திநிபாத உத்தமர்களே அருளொளியை அறியும் தக்கார்களாவர். இத்தகைய சான்றோர் ஆணவம் கன்மமாதிய மலங்கள் தம்மை மறையாத வண்ணம் மலபரிபாக முற்று அருளாளனான ஆதிபகவானின் நற்றாள் வணங்கி நற்றாள் தலைப்பட்ட குரபரனைக்குறுகி அருள் வண்ணம் அறிக

## 2 : 2 : மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்

மாதுக்கம் என்பது பிறப்பிறப்பாகிய பெருந்துன்பமாகும்.

மனம் பற்றி வாழ்தல் என்பது ஒரு நெறிய மனத்தினராய் ஆதி மாண்பினைச் சிந்தித்திருத்தல் என்னும் நற்சிந்தனையாம். நற்சிந்தனையே பிறவித்துன்பம் நீங்கி அருள் பெற்றுய்தற்கான நெறி. வெந்தசாம்பர் எனத் தொடங்கும் ஆதி மான்புப் பாசுரத்திலே தம்மையே சிந்தியா எழுவார் வினை தீர்வரால் என்றதும் அது. சேக்கிழார் பெருமான்,

**மாதுக்கம் நீங்கவுறுவீர் மனம் பற்றும் என்பது**
**ஆதிச் சுடர்ச் சோதியை அன்பின் அகத்துள்ளாக்கிப்**
**போதித்த நோக்குற்று ஒழியாமற் பொருந்தி வாழ்ந்து**
**பேதித்த பந்தப் பிறப்பின் நெறிபேர்மின்**

என்று பேருரை வரைந்தமையும் ஈண்டு சிந்திக்கத்தக்கது.

## 2:3 சாதுக்கண் மிக்கீர் இறையே வந்து சார்மின்

சார்பில்லா மல இருளைச் சாராது மெய்சார்பாம் திருவடியைச் சார்ந்து அன்பினிற் போற்றுதல் அருளுறு நெறியாம். சேக்கிழார் பெருமானும்

**"ஈண்டு சாதுக்கள் என்றெடுத் தேதிற்று**
**வேண்டும் வேட்கைய வெல்லாம் விமலர் தாள்**
**பூண்ட அன்பினிற் போற்றுவீர் சார்மின் என்று**
**ஆண்ட சண்பை அரசர் அருளினார்"**

எனப் பாடினார்.

இவற்றால் அருளே தாரகமென்பதும் சிவசிந்தனையே அருளுறு நெறி என்பதும் ஆளுடைய பிள்ளையார் எழுதிய ஆதிஞானம் என்பது துணிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசகாரியம் *(தொடர்ச்சி)*

## சிவதத்துவம்

சிவபெருமான் இவ்வாறு திருமேனிகொள்ளும் கால், சிற்சத்தியாகிய பராசத்தியானது அரசசத்த யொன்றே உத்தியோக வேறுபாட்டால் பலவாயி னாற்போல் உயிர்கட்கு மலத்தை நீக்கி சிவத்தை அளித்தற்கண் உளதாகிய கருணை என்னும் இச்சையும், அதற்கு செய்யக்கடவதாகிய உபாயங் களை அறிவதாகிய ஞானமும், அறிந்த போத வ்வாறு சங்கற்பித்து செய்வதாகிய கிரியையுமாகிய மூன்று சத்திகளாய் அவற்றுள் ஞானமேயாய் வியாபரிக்கிற் சிவமெனவும், கிரியையேயாய் வியாபரிக்கிற் சக்தியெனவும், இரண்டும் ஒத்துவியாபரிக்கிற் சதாசிவம் எனவும் கிரியையே வியாபரிக்கில் மகேசுவரம் எனவும், ஞானமேவி யாபரிக்கிற் சுத்த வித்தையெனவும் பெயர்பெற்று நிற்பன். இவ்வைந்தும் இறைவனுக்கு சுந்தரவடி வானதுபற்றி சிவதத்துவம் என்னும் பெயர் பெறும்.

தோற்றக் கேடுடையனவாய தத்துவங்கள் இறைவனுக்கு சுந்தரவடிவமாமாறு யாங்ஙனமெனின் தோற்றக்கேடுகளுக்கேதுவாய காலதத்துவம் ஆண்டின்மையின் என்க. நித்தமாயினும் கலை யித்திறமெனப் பெயர் பெற்று காலதாமதமாய் நிற்கும் சிவசக்தியின் வியாபார பேதத்தால் முற்பிற்பாடு கூறப்பட்டது.

சுத்தசிவமானது இவ்வைந்து தத்துவங்களுள் சிவசத்தி என்ற இரண்டு தத்துவங்களை அதிட்டித்து நிற்கும்போது செய்யக்கடவதாகிய அறிவுமாத் திரமாய் நிற்கும் சமயம் பற்றிச் சிவனென்றும், சுத்தர் என்றும், சாதாக்கிய தத்துவத்தை அதட்டித்து நிற்கும் போது செய்யக்கடவதை போசிக்கும் சமயம் பற்றிப் போக சிவமென்றும் உத்தியுக்கதர் என்றும், ஈசுரம், சதாக்கியம் என்னும் இரண்டு தத்துவங்களை அதிட்டித்து நிற்கும்போது சங்கற்பித்து செய்யும் சமயம் பற்றி அதிகார

## வித்தியாதத்துவம்

சிவனென்றும் பெறவிருந்தா னென்றும் பெயர் பெற்று இம் மூன்றும் முறையே அருவம் அருவுருவம் உருவம் எனத்தடத்த லக்கணமாப் பதியெனவும் பெயர் பெறும்.

இனிச் சிவபெருமான் ஆன்மாக்கள் தநுகரணாதிகளை எடுத்துப் போகங்களைப் புசிப்பதற்கு அநந்தேசுரர் வாயிலாக அசுத்த மாயையினின்று காலதத்துவம், நியதிதத்துவம், கலாதத்துவம் எனும் மூன்றினையும் தருவர்.

## காலதத்துவம்

போகங்கள் புசிப்பதற்குப் பக்குவமாகும் ஏதுவினால் செல்காலம் நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று திறப்படும். இந்தப் பேதம் சூரிய கதியின் உபாதியால் உண்டாவதல்லது. காலதத்துவத்திற்கு எதார்த்தமல்லவெனின் காலதத்துவமே இல்லையென்று கொள்ளவரும். சூரியகதி தின மாச ஆதிகட்கேயல்லாது கணம், நொடி முதலியவைகளுக்கு அல்லவாதலின் காலதத்துவம் வேறேயுண்டு. அத்தத்துவம் ஒன்றாயிராமல் மூன்றாயிருப்பானேன் எனின் ஒன்றாயிருக்குமாயின் இன்ன காலத்தில் இன்னது ஆகும் என்பது கூடாது. ஆனதால் மேற்சொல் லியவாறு காலம் மூன்றாயிருக்க வேண்டுமென்பது சித்தம். இக்கால உற்பத்திக்கு காலம் உண்டோ இல்லையோ எனின் உண்டெனில் அவத்தையாம். இல்லெனில் காலமே உண்டாகாது. ஆதலின் தத்துவ தாத்துவிகங்களுக் கேதுவாய் காலாதீதரான ஈசுரன் சுயேச்சையினாலே காலதத்துவத்தை உண்டுபண்ணுவர். சுத்த மாயா புவன வாசிகளுக்குச் சுத்த மாயையினின்றும் இவ்வாறு சுத்த கால தத்துவம் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரம சூத்திரம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## முதலாம் அத்தியாயம்

## *முதலாம் பாதம்*

## 1:1 ஜோதிரதிகரணம்

(பிரமத்தை அறியும் ஆசை, பிரபஞ்சத்துக்கு மூலம் பிர்மம் என்னும் கருதுகோள், இக்கருதுகோளுக்கு ஆதாரமான சுருதிப்பிரமாணம், பிரபஞ்சத்துக்கு மூலம் பிரகிருதி, ஆன்மா, ஆன்ம சமஷ்டிரூபரான இரணிய கருப்பர், ஆதித்த மூர்த்தி, ஆகாயம், பிராணன் என்பாரது கருத்துக்களின் தவறு என்பன இதுவரை கூறப்பெற்றன. இனி (பூத) சோதி பிரபஞ்சத்துக்கு மூலமென்பாரது கருத்தின் தவறு கூறப்பெறும்)

**1:1:25.** (பிரமம்) சோதி, சரணம் கூறப்படலான்.

சோதி பாதமுடையதெனக் கூறப்படலால் அது பூத சோதியையன்றி பரஞ்சோதியான பிரமத்தையே குறிக்கும். சுருதியிலே "இதற்கு மேல் பிறிதோர் உலகம் இல்லை என்றபாலதாம் உயர்வாகிய உலகத்திலே, ஒவ் வொன்றுக்கும் மேலாய், அனைத்துக்கும் மேலாய், இந்த ஆகாயத்துக்கும் மேலாய் பிரகாசிக்கின்ற அந்தச், சோதியே புருசனுக்குள்ளேயுள்ள சோதி." (சாந் 3:13:7) என உளது. இதனால் மேலான அச்சோதியே பிரபஞ்சத்துக்கு மூலமென்பர். மேலான அச்சோதி பூதங்களுள் ஒன்றானதன்று. 'பூதமனைத்தும் அவரதுபாதம்" (சாந் 3:02:6) என்னும் சுருதியாலே பூதசோதி பிரமத்தின் ஓரம்சமாதலால் அது பிரபஞ்சத்துக்கு மூலமன்று. சோதியுட் சோதியான பரஞ்சோதியே பிரபஞ்சத்துக்கு மூலமாகும்.

**1:1:26.** சந்தசைக் கூறினமையின் (பிரமம்) அன்றாம் எனின் அன்று. அங்ஙனம அறிவானது பிரமத்தில் அர்ப்பணம் செய்யப்பட்டதாகக் கூறப்படலான் அதுபற்றியன்றோ (பிரமாணமும்) காணப்படுகிறது.

'பூதமனைத்தும் அவரது பாதம்' எனும் சுருதியால் பூதசோதியன்றெனின், "இப்பூதமனைத்தும் சந்தசு" (காயத்திரி) (சாந் 3:12:1) எனக் காயத்திரியைக் குறிக்கும். எனின் காயத்திரியும் அன்றாம். ஏனெனில் காயத்திரி அறிவைப் பிரமத்தில் அர்ப்பணம் செய்தற்கான சாதனமாகக் கூறப்பெற்றிருக்கிறது. ஆதலால் காயத்திரி சர்வவியாபகமுடையதன்று. எனவே சர்வ்வியாபகமுடைய பரஞ்சோதியான பிரமமே பிரபஞ்சத்துக்கு மூலமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1:1:27. பூதம் முதலியவற்றைப் பாதங்களாகக் கூறல் பொருத்தமெனினும் அதுவும் அங்ஙனம்.

பூதம், பிருதுவி, சரீரம், இதயம் என்னும் பாதங்கள் உடைமை காயத்திரிக்குப் பொருந்துமெனினும் மேற் சொன்ன சர்வவியாபகமின்மையால் காயத்திரிக்குப் பொருந்தாது. பரஞ்சோதியான பிரமத்துக்கே பொருந்தும்.

1:1:28. உபதேசம் பலதிறப்படுதல் பற்றி அது பிரமமன்றாம் எனின் அன்று. ஈரிடத்தும் விரோதமின்மையின்.

("பூதமனைத்தும் அவரது பாதம்" (புருஷசூக்தம்) "அவரது அமிர்தமாகிய மூன்று பாதமும் ஆகாயத்தன" (சாந் 3:12:6) "ஆகாயத்தின் மேல் சோதி" (3:12:7)) என) உபதேசங்கள் பலதிறப்படுதலால் இவற்றால் சொல்லப்படும் சோதி பிரமமன்று எனின் அற்றன்று. ஆகாயத்தன என்பதும் ஆகாயத்தின் மேல் என்பதும் 'மேல்' எனும் ஒரு பொருளையே தரும் மொழி இலக்கணம் உள்ளமையால் ஈரிடத்தும் முரண்பாடின்று. ஆகவே பூதமுதலான பரஞ்சோதியாம் பிரமமே பிரபஞ்சத்துக்கு மூலமாம்.

# நல்லூரான் கிருபை வேண்டும்

நல்லூரான் கிருபை வேண்டும் ~ வேறென்ன வேண்டும்
நமைப்பிரி யானென நம்பிட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் ~ வேறென்ன வேண்டும்)

எல்லா ரிடத்தும் அவன் இருப்பதைக் காணவேண்டும்
கொல்லாமை கள்ளாமை கோபத்தை நீக்கவேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் ~ வேறென்ன வேண்டும்)

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருக்கவேண்டும்
அல்லும் பகலுமவன் அடியிணையே தொழவேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் ~ வேறென்ன வேண்டும்)

உல்லாசமாக உலகிற் றிரிய வேண்டும்
ஓம்சிவாய நமவென ஓதிக்கொள்ள வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும் ~ வேறென்ன வேண்டும்)

பல்லோர்புகழ் நல்லூர் செல்லப்பன் பாதத்தை
பக்தியாய்க் கும்பிட்டுப் பாடிட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும்~ வேறென்ன வேண்டும்)

சொல்லும் யோகசுவாமி தோத்திரப் பாடலை
எல்லோரும் கேட்டு மகிழ்ந்திட வேண்டும்
(நல்லூரான் கிருபை வேண்டும்~ வேறென்ன வேண்டும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நல்லூர் முருகன் திருப்புகழ்

தாத்தா தானம் தத்தன தனதன
தாத்தா தானம் தத்தன தனதன
தாத்தா தானம் தத்தன தனதன — தனதான

பூத்தார் சூடும் கொத்தலர் குழலியர்
பார்த்தால் வேலும் கட்கமும் மதன்விடு
போர்க்கார் நீடும் கட்சர மொடுநமன் — விடுதூதும்

போற்றார் நாளும் கைப்பொரு ளுடையவர்
மேற்றா ளார்தம் பற்றிடு ப்ரமையது
பூட்டா மாயம் கற்றமை விழியினர் — அமுதூறல்

வாய்த்தார் பேதம் செப்புபொய் விரகியர்
நூற்றேய் நூலின் சிற்றிடை இடர்பட
வாட்டாய் வீசும் கர்ப்புர மருகமதம் — அகிலாராம்

மாப்பூ ணாரம் கச்சணி முலையினர்
வேட்பூ ணாகம் கெட்டெனை உனதுமெய்
வாக்கால் ஞானம் பெற்றினி வழிபட — அருளாயோ

ஆத்தாள் மால்தங் கைச்சிக னிகைஉமை
கூத்தா டானந் தச்சிவை திரிபுரை
ஆட்பேய் பூதம் சுற்றிய பயிரவி — புவிநேசை

ஆக்கா யாவும் பற்றியெ திரிபுரை
நோக்கா ஏதும் செற்றவள் திருவிளை
யாட்டால் ஈசன் பக்கம துறைபவள் — பெறுசேயே

ஏத்தா நாளும் தர்ப்பண செபமொடு
நீத்தார் ஞானம் பற்றிய குருபர
யாப்பா ராயும் சொற்றமிழ் அருள்தரு — முருகோனே

ஏற்போர் தாம்வந் திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய் வீசும் பொற்ப்ரபை நெடுமதில்
யாழ்ப்பா ணாயன் பட்டின மருவிய — பெருமாளே

## கருத்து

பூமாலையுடன் பூங்கொத்துக்களையும் சூடும் கூந்தலை உடையவரும், வேல், வாள், மன்மதனின் மலர்க்கணைகள் யமதூதர் போன்று பாய்வதும், பொருளுடையவர் மீது முயற்சி மிகச் செய்து தம்மீது அன்பு வரும்படியான ஆசைமயக்கத்தை ஏற்றும் மாயவித்தைகளைக் கற்றுள்ளதுமான அஞ்சனம் பூசிய கண்ணை உடையவரும், வாயிதழ் அமுதூறல் வாய்ந்தவர்களும், மனம் மாறும் படி பேசும் பொய்ப்பேச்சில் வல்லவரும், நூலினும் மெல்லிய சிற்றிடை நோக பச்சைக்கற்பூரம், கஸ்தூரி, அகில், மாலை, முத்துமாலை, ரவிக்கை, என்பவற்றை அணிந்துள்ள தனபாரத்தையுடையவருமான மகளிர் மீது ஆசைகொண்டு உடல் நலம் கெட்ட என்னை,

இனி, உனது மெய்ம் மொழியால் ஞானம்பெற்று வழிபடுமாறு திருவருள் புரியமாட்டாயா?

அம்மை, திருமாலின்தங்கை, என்றும்கன்னி, உமை, நடனஞ்செய்யும் ஆனந்த சிவாம்பிகை, திருபுரை, பேய்பூதங்கள், சுற்றியுள்ள பைரவி, புவனங்களுக்கு ஈஸ்வரி யாவற்றையும் படைத்தும், காத்தும், பார்வையால் அழித்தும் முத்தொழில் செய்பவள், ஒரு திருவிளையாட்டாக சிவபிரானின் பாதியாக வீற்றிருப்பவள் ஆகிய பார்வதியம்மை பெற்ற சேயோனே !

நாடோறும், போற்றிசெய்து, நீர்க்கடன், செபம் இவற்றைச் செய்து துறவியாயினோர் தமது ஞானநிலையில் பற்றுக்கோடாமல் பற்றிக்கொள்ளும் பரமகுருபர!

சந்த யாப்பில் திருப்புகழ் சொல்ல வல்ல செந்தமிழ் நலம் அருளிய முருகப் பெருமானே!

இரப்பவர் தம் இச்சை தீர்த்து மகிழும் வண்ணம் வேண்டியவற்றை வாரி இறைக்கும் வள்ளற் பெருமக்கள் வாழும், பொன்னொளி வீசும் நீண்ட மதில் சூழ்ந்த யாழ்ப்பாணப் பட்டினத்தில் வீற்றிருக்கும் பெருமாளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைத் தேரடி ஞான சந்தானம்

தென்முகக் கடவுளே மூலகுரு. அவர் கைலையிலே கல்லால் நீழலில் இருந்து ஞான உபதேசம் செய்தனர். அவர் மௌனநிறைவில் பொருந்தி சின்முத்திரையால் அவ்வுபதேசம் செய்தனர். அவர் செய்த ஞான உபதேசம் திருநந்திதேவர் முதலாய சந்தான குரவர்கள் வாயிலாக வழிவழியாகப் பேணப்பட்டது. திருநந்திதேவர் முதலான இக்குரவர்கள் அகச்சந்தான குரவர் எனப்பட்டனர்.

திருக்கைலாயத்தில் நிலவிய இவ்வகச்சந்தான மரபு தென்புறத்தே தமிழக மண்ணிலும் தொடரலாயிற்று தமிழகத்திலே இப் புறச்சந்தானத்தின் முதல்வராக மெய்கண்டதேவர் திகழ்கின்றார். மெய்கண்டார் பன்னிரு சிறிய நூற்பாக்களிலே சிவஞானத்தைப் போதித்தார். அவர்தம் சீடரான அருணந்தி சிவாச்சாரியார். அச்சிவஞான போதப்பொருளை விரித்து சிவஞானசித்தியார் என்னும் நூலை எழுதினார். அருணந்தி சிவாச்சாரியாரை அடுத்தடுத்து வந்த மறைஞான சம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் என்போரும் இப்புறச்சந்தான மரபினரே.

இச்சந்தான மரபு தமிழகத்துக்கும் தென்புறத்ததான நம் சிவபூமியிலே நல்லைத் தேரடியிலும் தோன்றியது. செல்லப்பதேசிகரே இச்சந்தான மரபின் முதல்வர். அவர் அன்றாலின் கீழிருந்து அறம் உரைத்த அவரே யாவர். தட்சணாமூர்த்தத்தை மறைத்துக்கொண்டு மூவரும் ஒன்றாகச் சேர்ந்த அம்மூர்த்தம் விசர்க்கோலம் பூண்டு செல்லப்பராக வீற்றிருந்தது. செல்லப்பர் ஒரு மௌன முனிவரே. ஆயினும் தென்முகக்கடவுள் சின்முத்திரையால் உணர்த்திய ஆதி ஞானத்தை ஈழத்துப் பழகு தமிழில் "இப்படியும் எளிமையாச் சொல்வார் உளரோ" என்று வியக்கும் வண்ணமாக வெளிப்படுத்தினார்.

ஒரு பொல்லாப்பும் இல்லை
முழுதும் உண்மை
எப்பவோ முடிந்த காரியம்
நாமறியோம்

என்னும் மகாவாக்கியங்களாகவும்

அயலுணக்கில்லை
இருந்துபார்
ஏதுமொன்றறநில்
நாமே நாம்

ஆதிய சின்மொழிகளாகவும் அது வெளிப்பட்டது.

செல்லப்பதேசிகர் இவ்வண்ணம் சின்மொழியில் வெளியிட்ட சிவஞானத்தை அவர் தம் சந்தானத்தவரான எம் சுவாமிகள் விரித்துரைத்தனர். இவ்வகையால் மெய்கண்டதேவரை அடுத்து வந்து சிவஞானசித்தியார் அருளிய அருணந்தி சிவாச்சாரியாரை நிகர்த்தவராக அவர் உள்ளார். எங்கள் சுவாமிகள் செல்லப்பதேசிகர் உணர்த்திய வாக்கியங்களில் வாச்சிய (பொருள்) மயமாகவே பரிணமித்து இருந்தமையினால் அவர் கூறியனவெல்லாம் அவ்வாக்கியங்களின் பொருள் விரிப்பனவாகவே இருந்தன. அவர் தம் திருவாய் மொழிகளிலே பலகாலும் பயின்று வரும் செல்லப்பர் வாக்கியங்களும் உரையிறந்த அம் மகாவாக்கியங்களின் பொருளை நுட்பமாக விரிக்கும் சுவானுபவ மொழிகளும் இதற்குத் தக்கசான்றாக அமைவன. இவற்றுக்கெல்லாம் எடுத்துக்காட்டான திருவாய் மொழிகள் சிலவற்றை மேலே தருகின்றோம்.

**உண்மை முழுதுமென ஓதும் ஒருமொழியால்**
**என்னை மறந்தேன் இடரகன்றேன்**
**பின்னையிங்**
**காச்சரியங் காணேன் அண்ட பிண்ட மெல்லாமே**
**போச்சுதொன் றாகப் புகல்**

**எல்லாஞ் சிவன்செயல் எல்லாஞ் சிவன்வடிவு**
**எல்லாம் அவனன்றோ அன்னே என்னும்**
**எல்லாம் அவன்வடிவு எங்கும் அவனென்றால்**
**பொல்லாப்பிங் கேதடி அன்னே என்னும்**

**எப்பவோ முடிவானதென் றெங்கட்குச்**
**செப்புவா ரவர் சிந்தை தெளிந்திட**
**ஒப்பில் லாதபல் வார்த்தைகள் ஓதுவார்**
**அப்பில் உப்பென ஆனதென் சீவனே**

**நாமறியோ மென்று நகைத்தென்னை**
**நோக்கியே**
**காமங் கடந்தோன் கழறினான் - சேமமுடன்**
**சிந்தித்துச் சிந்தித்துச் சேவடியே தஞ்சமென்று**
**வந்தித்து நின்றேன் மகிழ்ந்து"**

**முடிந்த முடிபென்று முன்னின்று சொல்லப்**
**படிந்ததென் னுள்ளம் பதியில்- முடிந்ததே**
**மாயவிருள் மந்திரமும் தந்திரமும் நான்**
**மறந்தேன்.**
**தாயனைய செல்லப்பன் தான்**

செல்லப்பதேசிகரது இந்த நல்லைத் தேரடி ஞான சந்தானம் அவர் நிறுவிய ஞானப்பண்ணையான சிவதொண்டன் நிலையங்களில் என்றும் நின்று நிலவுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் கலிவெண்பாச் சாரம்

சிவதொண்டன்

*(சென்ற இதழின் 94ம் பக்கத் தொடர்ச்சி)*

அவன் நிலம் நீர் தீ வளி விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் அட்டமூர்த்தம் கொண்டு விளங்குகிறான். இயமம் நியமம் ஆசனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்னும் எட்டுப் பகுதிகளையுடைய அட்டாங்க யோகத்தின் முடிவில் ஞானத்தை அளிக்கும் பயனாக இருப்பவன் முருகன்.

## தசாங்கங்கள்

அன்பர்கள் உள்ளத்தில் பொங்கியெழுகின்ற ஆனந்தமாகிய மலை, பேரின்ப வெள்ளமாகிய ஆறு, இன்பந்தரும் மேலுலகமாகிய நாடு, போக்கு வரவில்லாத உயர்ந்த அழகிய நகரம், ஐந்தெழுத்தோதிச் செலுத்தும் குதிரை, மதம் தோய்ந்து களித்து துதிக்கையினால் ஐந்து மலங்களையும் காய்ந்த சிவஞானமாகிய யானை, அறிவும் அன்பும் கொண்டு தொடுத்த மலர் மாலை, ஐந்தொழில் நடத்தும் உயர்ந்த கொடி, நவநாதமாகிய முரசு, புலன்களை ஆக்கி இயக்கும் ஆணை ஆகிய தசாங்கங்கள் கொண்டவன் முருகன்

என்று இவ்வளவும் முருகப்பெருமானின் அருமை பெருமைகளை விள்க்கி சைவசித்தாந்தக் கருத்துக்கள் இக்கந்தர் கலிவெண்பாவில் சந்தமுற நன்கினிது சுருங்கக் கூறி விளக்கப்பெற்றுள. இனிக் கந்தபுராண வரலாறுகள் அழகுற மிகச் சுருக்கிக் கூறப்படுகின்றன.

## கந்தபுராணச் சுருக்கம்

கயிலாய மலையில் உமாதேவியுடன் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். ஒரு நாள் அசுரர்களின் கொடுமையைத் தாங்காத தேவர்கள், சிவபெருமானிடம் சென்று தங்கள் குறைகளை முறையிட்டுக் கொள்கின்றனர். சிவபெருமான் அவர்களின் முறையீட்டைக் கேட்டுத் திருவுளம் இரங்குகின்றார். தனக்கு இயல்பாக உரிய ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் ஐந்து முகங்களுடன் கீழ் நோக்கிய அதோமுகம் என்னும் முகத்தையும் கொண்டு ஆறுமுகங்கள் உடையவராய் ஆறு நெற்றிக் கண்களினின்றும் ஆறு தீப்பொறிகளை வெளியே விடுத்தார். அவைகள் எல்லா உலகங்களிலும் பரவித் தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்தன. அதனால் சிவபிரான் அவற்றைத் திருக்கரத்தால் எடுத்து வாயு தேவனிடம் தந்தார். அவன் அதனைத் தாங்கலாற்றாமல் அக்கினி பகவானிடம் அளித்தான். அவனும் அதனைத் தாங்க முடியாமல் குளிர்ந்த கங்கையாற்றில் விட்டான். கங்கையும் தாங்க முடியாமல் தனது மடியில் தாங்கி கரையிலுள்ள சரவணப் பொய்கையிற் சேர்த்தாள். அங்கு அப்பொறிகள் ஆறும் ஆறு குழந்தைகளாயின. கார்த்திகைப் பெண்களாகிய அறுவர் முலைப்பால் குடித்து விளையாடின. சிவபெருமான் அக்குழந்தைகளை உமாதேவியாருக்குக் காட்டினார். தேவியார் அந்த ஆறு குழந்தைகளையும் ஒன்றாகச் சேர்த்து எடுத்து அணைத்தார். அதனால் அவைகள் ஒருருவம் ஆயின. அது கண்டு மகிழ்ந்து கந்தன் எனப் பெயரிட்டு முகத்திலணைத்து உச்சிமோந்து திரு முலைப்பால் ஊட்டி உமாதேவியார் சிவபிரான் இடத்தில் அப்பிள்ளையைக் கொடுத்தார்.

உமாதேவியாரின் சிலம்பிலிருந்து சிதறிய நவமணிகளினின்று மாணிக்கவல்லி, முத்துவல்லி, புஷ்பராகவல்லி, கோமேதகவல்லி, வைடூரிய வல்லி, வைரவல்லி, மரகதவல்லி, பவளவல்லி, இந்திரவல்லி, இந்திர, நீலவல்லி என்னும் நவசக்திகள் தோன்றினர். அவர்கள் சிவபிரானை விருப்புடன் நோக்கிக் கருக்கொண்டனர். அதனால் அவர்களிடமிருந்து வீரவாகு, வீரகேசரி, வீரமகேந்திரர், வீரமகேச்சுரர், வீரபுரந்தரர், வீரராட்சதர், வீரமார்த்தாண்டவர், வீராந்தகர் வீரதீரர் என்னும் நவவீரர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய வீரவாகுவை அழைத்து நாரதமுனிவர் செய்த வேள்வியில் தோன்றி உலகத்தையழித்து உலவிவரும் ஆட்டுக்கடாவைக் கொண்டு வருக என்று முருகன் கட்டளையிட்டான். அங்ஙனமே வீரவாகு அதனைப் பிடித்து கொண்டு வந்து விடுக்க அதனை முருகன் எட்டுத் திக்குகளிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை வெண்பா - (அந்தாதித் தொடை)

நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் – நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி

தெளியுமே நின்சிந்தை செல்வனருள் பொங்கி
வழியுமே தானவர்கள் வர்னோர் – ஒழிவின்றி
வந்து வணங்கும் வளஞ்சேரும் நல்லூரிற்
கந்த னெனச் சொல்லிக் கருது.

கருத்திற் கருத்தா யிருக்குங் கழற்றாள்
விருத்தர்களும் பாலர்களும் வேண்டிப் – பெருத்த
மயில்வரும் வேலா! விமலா வெனச் சொற்
பயிலவறு மெங்கள் பவம்.

பவம் நீங்கும் பன்னிருகை வேலா வெனவே
தவமோங்குஞ் சாந்தம் பொறுமை – சிவமாம்
மனமு மடங்குமே மாசனைத்துந் தீருமே
சினமு மடங்குமே தேர்.

தேரடியிற் சென்று தெரிசித்தாற் போதுமெனப்
பாரறியச் சொன்ன பழங்கதையை – நீரறிய
மாட்டீரோ நின்று மனங்கசிந்து பாடீரோ
நாட்டீரே கேளீர் நலம்.

நலமறிய மாட்டாமல் நானென்று சொல்லிப்
பலபேசும் பாவி! பணிவோர் – நிலவுலகில்
நல்லூ ரெனும்பதியை நாடித் தரிசித்தாற்
பல்லூழி வாழலாம் பார்.

பாராயோ வென்னை நீ பார்த்துக் கவலையெலாந்
தீராயோ செய்ய திருவேலா – வாராயோ
மாமயி லேறி மகிழ்ந்து வரம் தந்து
சேமமுடன் காப்பாய் சிறப்பு.

சிறப்புக் குறைவிடமே தேவர் பெரும
மறக்குறத்தி வள்ளி மணாள! – நிறக்கொடிகள்
ஆடும் அழகுடைய நல்லூர்வாழ் ஆண்டவனே
நீடும் அருள்தருவாய் நீ.

நீயேநா னென்று நினைக்கு மடியார்க்குத்
தாயே எனப்பெரியோர் தாம்வணங்கும் – நீயே
துணையல்லால் வேறு துணையொன்றுங் காணேன்
இணையில்லா நல்லூரா வின்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தி விளையாடினான்.

ஒரு கால் பிரமன் கைலைக்குச் சென்றபோது அகந்தையால் முருகனை வணங்காது சென்றான். முருகன் அவனை அதட்டி அழைத்து நீ யார்? நீ செய்யும் தொழில் யாது? என வின்வினான். அதற்கு அவன் நான் பிரமதேவன். நான் செய்வது படைப்புத்தொழில் என்றான். அப்படியானால் வேதங்களை ஓதிக்காட்டு என்று முருகன் பணித்தான். பிரமன் வேதமோதத் தொடங்கி 'ஓம்' எனச் சொன்ன மாத்திரத்தில் அவனை நிறுத்தி ஓம் என்பதன் பொருளைக் கூறுக என்றான். பிரமன் தெரியாது என விழிக்க இதன் பொருள் அறியாத நீ இதுவரை எப்படிப் படைப்பினைச் செய்தாய் என்று எச்சரித்து அவன் தலையிற் குட்டிச் சிறையிலடைத்தான்.

பிரமன் சிறைப்பட்டதனால் வருந்திய திருமால் சிவபெருமானிடம் சென்று முறையிட்டான். அவர் நந்திதேவரை முருகன் பால் அனுப்பிப் பிரமன் சிறையை மீட்கச் செப்பினார். முருகன் அதற்கு மறுத்தார். சிவபிரான் நேரே வந்து முருகனைக் கண்டார். முருகன் சிவபிரானைப் பணிந்து பிரமன் பிரணவப் பொருள் அறியாமையினால் சிறைப்பட்டதைக் கூறினார். அப்போது பிரணவத்தின் பொருளை உன்னால் கூற முடியுமோ என்றார். முறைப்படி இருந்து கேட்டால் உரைப்பேன் என்றார் முருகன். சிவபெருமானும் அதற்கிசைய முருகப் பெருமான் சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம் இரு செவிமீதும் பகர்தல் செய்தார்.

தேவர்களின் துன்பத்தை தீர்ப்பதற்காக முருகன் தாரகாசுரனை அழித்தார். அவனுக்கு துணையாகப் போந்து மலையாக நின்ற கிரவுஞ்சம் என்னும் அசுரனையும் வீரவடிவேல் விடுத்தழித்தார். கடல் அலை வீசும் திருச்செந்தூரில் கருணை வெள்ளம் போல் உயர்பீடத்திருந்து தேவேந்திர னுக்குத் தஞ்சம் அளித்தார். சூரபதுமனுக்கு நல்லுரை கூறிவரும்படி வீரவாகு தேவரைத் தூதனுப்பினார். அப்பொழுதும் தேவர் சிறைநீக்க மறுத்தப்படியால் நாற்படைகளுடனும் சென்று பானுகோபன் சிங்கமுகன் முதலாய அசுரரையும் அழித்து வெற்றிமாலை சூடினார். அதனைக் கண்டு மறைந்த சூரனைப் பிடித்து மயில் சேவல்களாக மாறும்படி இரு கூறுகளாக்கினார். மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு சூரபன்மனைத் தடிந்ததனால் முருகன் மும்மூர்த்திகளின் குறைகளைப் போக்கினான். தேவர்களைச் சிறையிலிருந்து விடுவித்தான். முருகன் அருளால் தேவர்கள் மகிழுந்தார்கள். தேவேந்திரன் தனக்கும் தேவர்களுக்கும் நலம் செய்த முருகனுக்குத் தன் நன்றியைப் புலப்படுத்த விரும்பித் தனது மகளாகிய தெய்வயானையம்மையை மணம் செய்ய விரும்பி ஏற்றுக்கொண்டருளுமாறு முருக னைப் பணிந்து வேண்டினான். அவன் வேண்டு கோளுக்கிசைந்து தெய்வயானையம்மையை முருகன் திருப்பரங்குன்றத்தில் மணம் புரிந்து மகிழ்வித்தான்.

திருமாலின் புதல்வியாராகிய அமுதவல்லி சுந்தரவல்லியாகிய இருவரும் முருகனை மணக்க விரும்பி தவம் செய்தனர். முருகன் பணித்தப்படி அமுதவல்லி விண்ணுலகத்தில் தெய்வயானை யாகத் தோன்றி முருகனை மணந்தார். மற்றவ ராகிய சுந்தரவல்லி மண்ணுலகில் சிவமுனிவர் என்பவரின் அருட்பார்வையால் மானொன்றின் வயிற்றில் கருவுற்று கிழங்கு அகழ்ந்த குழியில் தோன்றி வள்ளி எனப் பெயரிடப்பெற்று நம்பி என்னும் வேடர் தலைவனால் எடுத்து வளர்க்கப் பெற்று வந்தனர். தமிழ் நூல்கள் கூறும் கற்பு களவு என்னும் இருவகைத் திருமணங்களுள் கற்பு மணத்துக்குரிய எடுத்துக் காட்டாகத் தெய்வயா னை அம்மையை மணந்த முருகன் களவு மணத்துக்கு இலக்கியமாகப் பலவகைத் திரு விளையாடல்களை நிகழ்த்தி வள்ளியம்மையை மணந்து கொண்டார்.

இவையே கந்தபுராணம் கூறும் விரிவான கதைகளின் சுருக்கமாகும். குமரகுருபரசுவாமிகள் இவையனைத்தையும் முறைப்படி ஒருங்கே தொடுத்து இனிது பாடியருளி அவரின் கவிநலனையும் பக்தியுணர்வின் சிறப்பையும் காட்டியுள்ளார்.

**பிரார்த்தனை**

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை, என்னும் ஆறு படைவீட்டுத் தலங்களையும் தரிசித்து ஆறெழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தைச்( சரவணபவ ) செபித்து வழிபடும் அன்பர்களின் உள்ளத்தில் எழுந்தருளிக் குடிகொள்ளும் முருகனே எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் பாதுகாத்து அருள்புரியும் செவ்வேள்!

எண்ணில்லாத தொன்னெடுங்காலமாக அடைந்து வருகின்ற பிறவித்துன்பமும் ,காலமின்றி எதிர்பாராது நேரும் இறப்புத் துன்பமும், பலகோடி இடையூறுகளும் , பலவகையான நோய்களும், பலவகையான பாவங்களும், பில்லி சூனியம் போன்ற ஏவல் வினைகளும், பாம்பு பசாசு கொடியபூதம் பெரிய தீ நீர்வெள்ளம் தீங்கு விளைக்க பகைவர்கள் விடும் படைக்கலங்கள் தீமை விளைக்கும் கொடிய நஞ்சு, கொடிய விலங்குகள் முதலியன எவையாயினும் அவை எப்போது வந்து எங்களை எதிர்த்தாலும் அவ்விடத்தில் அப்போதே நினது பச்சைமயில் வாகனமும், பன்னிரண்டு திண்தோள்களும், அச்சம் அகற்றும் அயில்வேலும், க்ச்சைகட்டிய திரு அரையும், சிறிய மெல்லிய திருவடியும் அஞ்சேல் என்னும் திருக்கையும் அருள்மொழியும் பன்னிரண்டு திருவிழிகளும், ஒளிவீசுகின்ற அழகிய திருமுடியும் எல்லாத் திசைகளிலும் எதிரே தோன்ற வெளிப்பட்டு இடுக்கண்களை எல்லாம் பொடியாக்கி எல்லா வரங்களையும் தந்து நீ எங்கள் உள்ளத்தில் புகுந்து உல்லாசமாகக் குடியிருத்தல் வேண்டும்.

மேலும் ஆசு மதுரம் சித்திரம் வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் திறமையும் அட்டாவதானம் என்னும் அருஞ்செயல் புரியும் ஆற்றலையும் இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறாக அமைந்த பற்பல காவியங்களின் பயிற்சியையும் எழுத்து சொல் பொருள் யாப்பு அணி என்னும் ஐந்திலக்க ணத்திலும் தேர்ச்சி நிரம்பிப் பழுத்த தமிழ்ப் புலமையையும் சிறப்புறக் கொடுத்தருள்க.இப் பிறப்பிலுள்ள அகப்பற்று புறப்பற்றுக்களாகிய இரு வேதனைகளையும் அகற்றி, ஆணவம் கன்மம் மாயைகளாகிய மும்மலங்களையும் நீக்கி, பசுபோதம் நீக்கி, ஒழுக்கம் வாய்ந்து திருவருளின் சிறப்பை ஆராய்ந்து இன்புறவதையே பொழுது போக்காகக் கொண்டுள்ள சிறந்த பழைய அடியாருடன் கூடும்படி செய்து, பேரின்பத்தை நிறைய நுகரச்செய்து, மணம்பொருந்திய சிவந்த தாமரை மலர்போன்ற நின் திருவடிகளைக் காட்டி ஆட்கொண்டு அடியோங்களுக்கு முன்வந்து அருள் புரிவாயாக.

இவ்வாறு பற்பல நலங்களும் அற்புத கவிதைச் சிறப்பும் அமைத்து பக்தியுணர்வை வளர்ப்பதற்குரிய பாராயணப் பனுவலாக விளங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் இக்கவின் பெறும் நூலை அனைவரும் நாடோறும் ஓதி முருகன் திருவருள் பெற்று உய்ய முயலுவோமாக.

## பரமனை எங்கும் பார்

பார்பார் பரமனை எங்கும்
பதையாதே சுகம் இதயத்தில் தங்கும்
ஆர்தான் உனக்கு நிகர் ஆவார்
ஐயப்படாதேதெய்வம் உன்னிடம் உண்டு 1

ஒரு பொல்லாப்பு மில்லையென்று வாக்கு
உணர்ந்துணர்ந் தின்பத்தில் தேக்கு
கருமத்தில் கையைநீ வைத்துக்
கடமையைப் பயமின்றி ஆக்கு 2

உன்மை முழுதுமென்று சாற்று
உனக்கொரு குறைவில்லை ஏற்று
கண்ணை இமைகாக்கு மதுபோல்
காப்பதுவேயுன் கடமை இனிமேல் 3

வீம்பிடும்பை ஆங்காரம் விட்டு
வேதாந்த நெறிதனைக் கட்டு
ஓம் சிவாயநம என்று செபிப்பாய்
உள்ளத்திற் கள்ளத்தை அவிப்பாய் 4

நல்லூரான் திருவடியைப் பாடு
நாமேநாம் என்று சொல்லி நாடு
கல்லுங் கரையக் கவி சொல்லு
காமக் குரோதத்தை வெல்லு. 5

மரகத மயில்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Worship and sing of Nallur

*Worship and sing of Nallur!*
*Then all the sorrows in the land will quickly flee away*

*Do not go with empty hands!*
*It is the place where Chellappan abode*
*So bring with you a coconut and fruit*

*Worship and sing of NALLUR*
*Then all the sorrows in the land will quickly flee way*

*Do not stray from place to place in agitation*
*Through care and worry over wife and child.*
*If your mind becomes discouraged and tries to run away*
*If sufferings crowd in on you out and drown you*
*Think of the feet of Chellappan - they will take to their heels and fly*

*Workship and sing of Nallur!*
*Then all the sorrows in the land will quickly flee away.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org